சுப்பிரமணிய சிவம்

ரா. ஸ்ரீனிவாச வரதன்

ரிப்பன் பிரசுரம்

விற்பனை உரிமை:

பிரபஞ்ச ஜோதி
பிரசுராலயம்

புதுக்கோட்டை.

சுப்பிரமணிய சிவம்

[வாழ்க்கை வரலாறு]

எழுதியவர்:
ரா. ஸ்ரீநிவாஸவரதன்

ரிப்பன் பிரசுரம்
ராமச்சந்திரபுரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்

முதற்பதிப்பு: மார்ச் 1947

விலை ரூ. 1—2—0
(ஒரு ரூபாய் இரண்டு அணா)

அச்சிட்டோர்:
மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்

பதிப்புரை

வானில் ஞாயிறு உதயமாகி, வையகத்தை ஒளிமயமாக்குகின்றது. வையகம் வழி தப்பிப்போகாது காக்க மகான்களாகிய பல தியாகிகள் தோன்றுகிறார்கள். எதன் பொருட்டு...? லக்ஷ்யத்தை சாதிப்பதற்காகவும், சத்யத்தை எடுத்துக்காட்டிப் பரவச் செய்வதற்காகவுமே!

தோன்றி மறைந்த தியாகிகள் பலர். ஆனால், அவர்களின் புகழுடம்பு மட்டிலும் உலகு உள்ள வரை மறையாது. அவர்களுள் தென்னாட்டில் தோன்றிய சிவம், பாரதி, ஐயர் ஆகிய பெரியார்களின் தியாகத்தை மறக்கவோ, மறுக்கவோ முடியாது. நாம் இவர்களைப்பற்றி எவ்வளவு அறிந்திருந்த போதிலும், திரு. ரா. ஸ்ரீநிவாஸவரதன் அவர்கள் இவர்களுடன் சேர்ந்து நெருங்கிப் பழகி தொண்டாற்றி வந்துள்ளனராதலால், சலனப் படம்போல் இச் சிவம் சரிதத்தில் பல நுண்ணிய கருத்துக்கள் கொண்ட சில நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கு இயல்பாயிற்று.

"பரிபூர்ண சுயேச்சையே தனது லட்சியம்" என்று கோஷித்த சுவாமி சுப்பிரமணிய சிவம் வாழ்க்கைச் சரிதத்தைச் சுருக்கமாக எழுதி உதவியிருக்கிறார்கள்.

மக்கள், நல்லுணர்ச்சிகளோடு வாழ்க்கைநலம் மேன்மேலும் உயர்ந்தோங்கிப் பல இன்னல்களையும் மலர்ந்த இதயத்துடன் வரவேற்றுச் சகித்துப் பன்மடங்கு வீறுகொண்டெழும் உள்ளம் படைத்தோராக வேண்டும்.

நாட்டின் தற்கால நிலைக்கு இந்நூல்கள் போல்வன நாட்டில் நிரம்பப் பரவ வேண்டும். யாவரும் படித்துப் பயன்பெறவேண்டும்.

உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இந் நூலைத் தமிழ் அன்பர்கள் வரவேற்றுத் தக்க ஆதரவு காட்டுவார்களென்று நம்புகின்றோம்.

ராமச்சந்திரபுரம்,
10-3-47. | ரிப்பன் பிரசுராலயத்தார்.

முன்னுரை

நமது நாடு புண்ணிய பூமி. நீர்வளம், நிலவளம், மலைவளம் பொருந்தியது. நவரத்னம், நவதான்யம் உண்டாவது. பிறவிப் பயன் இன்னது என்று அறிந்து உலகத்திற்குப் போதித்தது. பாரத வீரர் மலிந்தது, மாமுனிவோர் பலர் வாழ்ந்தது. அன்னக் கொடி கட்டி அடைக்கலம் புகுந்தோரை ஆதரித்தது. சகல விதத் திலும் தலை சிறந்து விளங்கிய நமது பாரத நாடு. உலகம் உய்விக்க வழி காட்டியாயிருந்த நமது ஹிந்துஸ்தானம். அன்பு, அறிவு, ஆண்மை ஆக்கத்தில் சிறந்த நமது ஆர்ய பூமி தற்சமயம் உலகத் திலுள்ள நாட்டுள் எல்லாம் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நிற்கின்றது. அந்தோ! பரிதாபம்!! வேலை யில்லாத் திண்டாட்டம். வயிற்றுச் சோற்றுக்குப் போராட்டம்.

நமது நாடு விடுதலை பெறவும், ஏழை மக்கள் சௌக்கியமாக வாழவும் பாடுபட வேண்டி 1885ம் ஸு இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றியது. 20-வருடகாலம் நம்மை ஆளும் ஆங்கில சர்க்காரிடம் பிச்சை கேட்டது. திலகர் தோன்றினர். "நாடு நமக்குச் சொந்தம், இதை ஆள நமக்குத்தான் உரிமையுண்டு," "சுயராஜ்யம் நமது பிறப்புரிமை, அதை நாம் அடைந்தே தீரு வோம்" என்றார். அன்னாரைப் பின்பற்றி வடநாட்டில் லாலாஜி, அரவிந்தர், பாலர், சவர்க்காரும்; தென்னாட்டில் சிவம், பாரதி, ஐயர், சிதம்பரம் பிள்ளையும் தேசத்தொண்டில் ஈடுபட்டனர். இப் பெரியார்களுடன் தமிழ்நாட்டிலுள்ள பல அன்பர்கள் நெருங்கிப் பழகி பல விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கலாம். நானும் ஓரளவு இவர்களுடன் பழகி தொண்டாற்றி யுள்ளேன். அதைக் கொண்டுதான் இதை எழுதத் துணிந்தேன்.

1906ல் நடைபெற்ற வங்காளப் பிரிவினை காலத்து சுதேசிய எழுச்சி உண்டாயிற்று. நாட்டில் புதிய ஆதர்சம், புதிய எழுச்சி, புதிய உணர்ச்சி தோன்றியது. அவ் வருடம் கல்கத்தாவில் தாதா பாய் நௌரோஜி தலைமையின் கீழ் நமது லட்சியம் சுயராஜ்யம், சுதேசி, பகிஷ்காரம், நாட்டுக்கல்வி ஆகிய நான்கு முக்கிய தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டு நாடெங்கும் வியாபித்தன.

நல்லதும் கெட்டதும் கலந்ததுதான் உலகம். ஒவ்வொரு நாட்டிலும் தேசத் தியாகிகளும், தேசத் துரோகிகளும் இருக்கத் தான் செய்வர். போராட்டம் நடக்கத்தான் நடக்கும். கடைசியில் சத்தியம் நிலைக்கும்; தர்மம் வெற்றியுறும். வலுத்த கூட்டம் எளிய கூட்டத்தை அடக்குகிறது. அது திமிறி எழுந்து போராடி வெற்றி

பெறுகின்றது. புதிய சக்தியை தலைமை தாங்கி நடத்தியவர் லோகமான்ய பால கங்காதர திலக மகாராஜர்.

அதன எழுச்சி நாட்டிலே வீறுகொண்டு கிளம்பிற்று. 1907ல் சூரத் காங்கிரஸ் தீவிர வாதத்துக்கும், மித வாதத்துக்கும் போராட்டம். திலகர் ஓர் புறம்; கோகலே மற்றொரு பக்கம். வாய்ச் சண்டை, அடிக்கடி. குழப்பத்தில் மகாசபை முடிந்தது. புதிய வேகம் நாடெங்கும் வியாபித்தது.

1908ல் வடநாட்டில் லோகமான்யர் 6-வருடம் கடுங்காவல் தண்டனை பெற்றார். லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டார். அரவிந்த கோஷ் புதுவையை யடைந்தார். விபின சந்திர பாலர் சிறை சென்றார். விநாயக தாமோதர சவர்க்கார் புதிய துறையி லிறங்கினர். தென்னாட்டில் சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப்பல் ஓட்டினார். சுவாமி சுப்பிரமணிய சிவம் துணைநின்றார். இருவரும் 6-வருடம் காவல் தண்டனை யடைந்தனர். சுப்பிரமணிய பாரதி புதுச்சேரி சென்றார். மகரிஷி வ. வே. சு. ஐயர் சவர்க்காரைப் பின்பற்றினர்.

சுதந்திரத்திற்காக நாட்டில் தோன்றிய புதிய எழுச்சியை மிதவாதிகளான கோபால கிருஷ்ண கோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, சர் பிரோஜ்ஷா மேட்டா, சர் டின்ஷா வாச்சாவைப் போன்றவர்கள் சர்க்காருடன் சேர்ந்து அடக்கிய பிறகு சூரத்தில் கலைந்து போன காங்கிரஸில் தலைமை வகித்த ராஷ்பிகாரி கோஷ் தலைமையின்கீழ் 1908 டிசம்பரில் காங்கிரஸ் மகாசபையை சென்னையில் நடத்தினர்கள்.

தமிழ் நாட்டில் தீவிர வாதத்திலிறங்கி, வேலை செய்து தியாகம் செய்த பெரியார்களில் ஒருவரும், வீரத்தில் சிவாஜியையும், மதாபிமானத்தில் சுவாமி விவேகானந்தரையும், தேசாபிமானத்தில் திலகபிரானையும் நிகர்த்தவரும், 1908-லேயே "பரிபூர்ண சுயேச்சையே தனது லட்சியம்" என்று கோஷித்தவருமான சுவாமி சுப்பிரமணிய சிவம் சரிதம் தற்சமயம் இருக்கும் உலக நெருக்கடியில் தேசிய வேகத்தில் வெளிவந்தால், வருங்கால இளந் தமிழர்களுக்கு போதிய ஊக்க மளிக்கு மென்று கருதி நான் படித்து, கேட்டு, அறிந்த மட்டில் எழுதி இருக்கின்றேன். குற்றம் நீக்கி குணம் கொள்க. என்னை ஊக்குவித்து வெளியிடச் செய்த அன்பர்கட்கு வணக்கம்.

மதுரை, } 1—6—46. } ரா. ஸ்ரீநிவாஸவரதன்.



குழந்தைப் பருவம்

இவர் கி. பி. 1884-ம் வருஷத்துக்குச் சரியான, தாருண வருஷம் புரட்டாசி மாதம் 20-ம் தேதி பௌர்ணமியன்று சந்திர க்ரஹணம் பிடிக்கப் போகின்ற சமயத்தில், மதுரை ஜில்லாவைச் சேர்ந்த வத்தலக்குண்டு என்னும் கிராமத்தில் பிறந்தார். இவருடைய பிதாவின் பெயர் ராஜமையர். மாதாவின் பெயர் நாகம்மாள். இவர்களுடைய குடும்பம் தனத்தில் பெருத்ததன்று; ஆயினும், ஏழ்மையில் ஆழ்ந்தது மன்று. இவருடைய பிதா, மகா தைர்யசாலி. எதையும் லட்சியம் செய்யாதவர்; நல்ல பலசாலி; எந்த விஷயத் திலும் கண்டிப்பான குணமுடையவர்; ஆனால், இவர் பிதாவுக்கு விவாகமானதும், சில மாத காலத்தில் நல்ல வாலிப வயதாகையால், பால்ய சேஷ்டை மிகுதியால் குடும்பத்தை விட்டு ஊர் சுற்றப் புறப்பட்டு விட்டார். நான்கு வருஷங்கள் அவர் அம்மாதிரி வீட்டுக்கு வராம லிருந்தார். இவருடைய தாயின் பிதா அய்யம்பாளையம் என்னும் கிராமத்தில் கிராம முன்சீப்பாயிருந்தார். அந்தக் கிராமத்திலும் சுற்றுக் கிராமங்களிலும் அவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. இவருடைய மாதா அவருடைய பிதாவிடமே இருக்க வேண்டியதாயிற்று. ஒரு நாள் இவருடைய தாயார் ஒரு கனவு கண்டார். மதுரை மீனம்பிகை ஆலயத்தில் எழுந்தருளி யிருக்கும் மகா சக்தி பிரசன்னமாகி, ஒரு குழந்தை போன்ற உருவத்தைக் கையில் கொடுத்ததாகவும், அம்மையார் அதை வாங்கிப் பார்த்ததும் மரப் பாவையாக இருந்தது கண்டு, அதை

திருவடிகளில் போட்டு விட்டதாகவும், உடனே அது தாடி மீசை சடா முடிதாரராகக் காட்சியளித்ததாகவும் சொப்பனம் கண்டதை, பொழுது விடிந்ததும் தனது தகப்பனரிடத்தில் சொன்னார். அன்னார், 'குழந்தாய் கவலைப் படாதே! உனக்குச் சீக்கிரம் ஓர் ஆண் குழந்தை பிறக்கும்' என்று ஆசிர்வதித்தார். 'அப்பா! புருஷன் வீட்டில் இல்லாத காலத்தில் குழந்தை எவ்வாறு பிறக்கும்' என்று கேட்க, 'அம்மா! சீக்கிரத்தில் உன் கணவர் வந்துவிடுவார்' என்று சொன்னார். அதன்படியே ஒரு மாதத்திற்குள் வெகு நாள் வீடு வராத புருஷன் வந்து சேர, கருத்தரித்து சிவம் ஜனனமானார். இருந்தும் சில தினங்களில் அவர் சுபாவப்படி வீட்டை விட்டு வெளிக் கிளம்பி விட்டார். அப்பொழுது இவருடைய பாட்டனர் கிராம முன்சிபாகையால், சில சமயங்களிலே குடிகளிடமிருந்து வசூல் செய்த பணத்தை யெல்லாம் குவித்து வைத்துக் கொண்டு எண்ணுவார். அப்பொழுது ஸ்ரீ சிவம் தவழ்ந்து விளையாடிக் கொண்டே வருவார். பாட்டனர் அங்கு குவித்துக் கிடக்கும் பலவித நாணயங்களைக் காட்டி, "அப்பா உனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்" என்பார். ஸ்ரீ சிவம் நாணயங்கள் எல்லாவற்றையும் புரட்டிப் புரட்டி ஒரு பைசாவைத் தேடி எடுத்துக் கொள்வார். "இவனுக்குப் பணத்தின் மீது ஆசையே யில்லை" யென்று பாட்டனர் பேரனைக் கட்டியணைத்து மகிழ்வார்.

பாலப் பருவம்

இவருக்கு நான்கு வயதாயிருந்தபொழுது தொட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார். இரவு காலம். பாட்டனரும் மாதாவும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு புராணிகர் மார்க்கண்டேய புராணத்தைப் படித்துக் கொண்டிருந்தார். குழந்தையும் கவனமாகக் கேட்டுக்

கொண்டிருந்தது. ஆனால் ஒன்றும் விளங்கவில்லை. பொழுது விடிந்தவுடன் குழந்தை பாட்டனாரை நோக்கி "தாத்தா! ராத்திரி என்னமோ படித்தார்களே அதென்ன?" என்று கேட்டது. பாட்டனார், "அப்பா, உன்னைப்போல ஒரு குழந்தை பரமசிவனை நோக்கி பூஜை செய்து சாகாத வரம் பெற்றான். இந்தக் கதையைத் தான் இராத்திரி படித்துக் கொண்டிருந்தோம்" என்றார். குழந்தை "அப்படியானால் நானும் பூஜை செய்யலாமோ? அந்தப் பரமசிவம் எங்கே யிருக்கிறார்?" என்று கேட்க, பாட்டனார் ரிஷப வாஹனாரூடராய் பார்வதி சமேதராயுள்ள பரமசிவம் அமைந்துள்ள மரப்பாவை யொன்றைக் குழந்தை கையிலே கொடுத்து, "இதுதான் பரமசிவம், நீ பூஜை பண்ணு" என்று சொன்னார். ஸ்ரீ சிவம் அதை ஒரு அறையில் கீழே சுத்தம் செய்து மணையிட்டு அதில் வைத்து, தினந்தோறும் காலையில் எழுந்தவுடன் கொல்லையில் போடப்பட்டிருந்த காய்கறிச் செடிகளின் புஷ்பங்களை யெல்லாம் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, "பரமசிவனே! உனக்குப் பூஜை பண்ணுகிறேன், பரமசிவனே, உனக்குப் பூஜை பண்ணுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே புஷ்பங்களை யெல்லாம் எடுத்து அந்த மரப்பாவை மீது போடுவார். தாயார் அல்லது பாட்டனார் ஏதேனும் குழந்தைக்குத் துட்டுக் கொடுத்தால், ஸ்ரீ சிவம் அதை எடுத்து அடுத்த வீட்டுக் கடைக்குச் சென்று கர்ப்பூரம் அல்லது சாம்பிராணி வாங்கி வந்து சுவாமிக்கு தூப தீபம் காட்டி விடுவார். ஏதேனும் தின்பண்டம் கொடுத்தால் ஸ்வாமிக்கு முன்னே கொண்டு போய் வைத்து நைவேத்தியம் செய்து "ஸ்வாமி, நீ சாப்பிடு!" என்று சொல்லி விட்டுப் பின்னர் தான் அதைத் தாம் தின்பார்.

பள்ளிப் பருவம்

இவர் விளையாடச் செல்வதில்லை. உண்டு உறங்கும் சமயம் தவிர, மற்ற சமயமெல்லாம் பரமசிவ பூஜைதான். இவர் சரீரமெல்லாம் திருநீறணிந்து அந்த மரப் பாவைக்கு முன்னே யுட்கார்ந்து கொண்டு பூஜை செய்வதை ஒரு ஆச்சரியமாக அந்த கிராமத்து ஜனங்கள் பலரும் தினந் தோறும் வந்து பார்த்துப் போவார்கள். இவருடைய ஏழாம் வயது வரையில் இவர் இம்மாதிரி செய்து வந்த தாகக் கேள்வி. இவருடைய பாட்டனார் ஒரு பெரிய வேதாந்தியா யிருந்தபடியினால், எப்பொழுதும் இவருக்கு இராமாயண, பாரத, பகவத் கதைகளை யெல்லாம் சொல்லிக் கொண்டே யிருப்பார். குழந்தைப் பருவத்திலே இவர் மிகவும் பயந்த சுபாவமுடையவரா யிருந்தாரென்று தெரி கிறது. இவருடைய பாட்டனார் தொண்டு கிழவராய் விட்ட படியால் அந்த கிராம முனிசிப்பு வேலையை அவருக்குப் பதி லாக இவருடைய தகப்பனார் கொஞ்சகாலம் பார்த்து வந்தார். பின்னர் இவருடைய ஒன்பதாம் வயதில் கிரமப் படி உபநயனமாயிற்று. இவருடைய படிப்பை உத்தே சித்து, இனிமேல் கிராமாந்தரங்களில் இருக்கக் கூடா தென்று தீர்மானித்து, இவருடைய பெற்றோர் மதுரைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே இவர் கட்டுசெட்டி மண்ட பத்திலும் சேதுபதி ஹைஸ்கூலிலுமாகப் படித்து வந்தார். இதற்குள்ளாக இவருடைய குடும்பம் மேலும் மேலும் வறுமை மிகுந்து மிகவும் கஷ்டப்பட வேண்டி வந்து விட்டது. இதனால் இவருடைய பெற்றோர் திருவனந்தபுரம் போக வேண்டி நேர்ந்தது. அங்கே தான் இவருடைய குழந்தைக் குணங்களெல்லாம் மாறத் தலைப்பட்டன.

வாலிபப் பருவம்

திருவனந்தபுரத்தில் 'ஊட்டுப் புறைகள்' என்ற தர்ம சத்திரங்கள் உண்டு. பிராமணர் எவருக்கும் இரண்டு வேளையும், எத்தனை தடவை வேண்டுமானாலும் அன்ன தானம் செய்யப் பட்டு வந்தது. ஆதலால் பிராமணர்களுக்கு அங்கு காலக்ஷேபத்துக்கு அதிகக் கவலையில்லை. ஆகையால் சென்னை ராஜதானியின் நாலாபக்கங்களிலிருந்தும் வறுமை மேலிட்ட பிராமணர்கள் அங்கு வந்து குவிந்து கொள்வது வழக்கம். அங்கே டவுன் ஹைஸ்கூலிலும், நேடிவ் ஹைஸ் கூலிலும் சிவம் படித்து வந்தார். குழந்தை முதற் கொண்டே இலக்கியப் படிப்பில் இவருக்கு ப்ரீதியும் திறமையும் மிகுதியாக உண்டு. கணித சாஸ்திரம் மட்டும் இவருடைய மூளையில் நுழையாது. இவர் பள்ளிக்கூடத்தில் சங்கங்கள் ஏற்படுத்தி காரியதரிசியாகவும் இருந்துவந்தார். இவருக்கு இயற்கையிலே அமைந்திருந்த மதப்பற்று அதி கரித்துக் கொண்டே வந்தது. பல பக்தர்களைக் கொண்டு பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரசங்கங்கள் செய் வித்தும் பாடங்கள் சொல்லச் சொல்லியும் இவர் கேட்டு வந்தார்.

1899-ல் இவருக்கு விவாகமாயிற்று. இவர் பள்ளியில் படிக்குங் காலத்தில் இவருடைய இலக்கிய அறிவின் விசேஷத்தைப் பாராட்டி இவருக்குப் பல தடவைகளில் பரிசுகள் கொடுக்கப்பட்டன. ஆசிரியர்கள் பலர் இவரைப் பலவிதமாக மெச்சியுள்ளார்கள். வர வர இவருடைய பழைய பயந்த ஸ்வபாவம் மாறத் தொடங்கி விட்டது. 1900-ம் வருஷத்திலே இவர் கோயம்புத்தூருக்குச் சென்று ஒரு வருஷம் அங்கு படிக்கும்படி நேர்ந்தது. அப்பொழுது தான் இவருடைய உள்ளத்திலே தேசாபிமானம் தானாகவே பூக்கத் தொடங்கிற்று. அச் சமயத்தில் நடந்துகொண்டி

5 83

ருந்த போயர் யுத்தத்தில், போயர்கள் காட்டிய வீரச் செயலை மெச்சி ஆங்கிலத்தில் பல கவிகள் கட்டினார். அவை இப்பொழுது கிடைக்கவில்லை. வர வர இவருக்கு விளையாட்டுப் புத்தி மலிந்து, சேஷ்டை குணம் மிகுந்துவிட்டது. பள்ளிக்கூடத்துக்குச் சென்றால் எப்பொழுதும் ஏதேனும் சேஷ்டைகள் செய்து கொண்டே யிருப்பார். உபாத்தியாயர்கள் இவரைக் கண்டால் வெறுப்பார்கள்; சில சமயங்களிலே பயப்படவும் செய்வார்கள். குறுகிய பார்வையுடையவரான கணித சாஸ்திரப் பண்டிதரொருவர் தினந்தோறும் இவரிடம் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது; சில சமயங்களிலே கண்ணீர் விட்டு அழுதும் விடுவார்; இவர் நல்ல சரீரக்கட்டு வாய்ந்தவராயுமிருந்தார். ஒருநாள் இவருடைய சேஷ்டைகளைப் பொறுக்க முடியாமல், ஆங்கில பாஷைப் பண்டிதர் இவருக்குப் பிரம்பினால் ஆறு அடி தண்டனை விதித்து, கையை நீட்டச் சொல்லி அடித்தார். இவர் மூன்று அடி பொறுத்துக் கொண்டார். அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை யாகையினால், நான்காவது அடி கையில் விழுந்தவுடன் அப்படியே பிரம்பைக் கையினால் பிடித்துக் கொண்டு விட்டார். உபாத்தியாயர் எங்கே இவர் தம்மைத் திருப்பி யடித்து விடுவரோவென்று பயந்து, நாற்காலியினின்றும் எழுந்திருந்து தலைமை உபாத்தியாயருடைய அறைக்கு ஓடிப் போய்விட்டார். பிள்ளைகளெல்லோரும் சிரித்தார்கள். இவர் பிரம்பை மேஜையின் மேல் வைத்துவிட்டு, தமது இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டார். தலைமை உபாத்தியாயர் வந்து இவரைக் கூப்பிட்டு, “நீ என் உபாத்தியாயரை அடிக்கப் போனாய்?” என்று கேட்க, இவர் “நான் அடிக்க எண்ணவேயில்லை; வலி பொறுக்க மாட்டாமல் பிரம்பைப் பிடித்துக் கொண்டேன்; உபாத்தியாயர் பயந்து ஓடி விட்டார்; அதற்கு நான் என் செய்வது?” என்று பதிலுரைத்தார்.

தலைமை உபாத்தியாயர் இவருக்குச் சில புத்திமதிகளைச் சொல்லிவிட்டுப் போனார்.

கேட்ட கேள்விக்கு எந்தப் பையனாவது சரியானபடி மறுமொழி சொல்லா விட்டால், அந்த ஆங்கில பாஷைப் பண்டிதர் "What I want is common sense"—அதாவது "எனக்கு வேண்டுவது சாதாரண அறிவு" என்று அடிக்கடி சொல்லுவார். இவர் ஒரு நாள் ஏதோ ஒரு கேள்விக்கு மறு மொழி சரியாய்க் கூறவில்லை. ஆங்கில பாஷைப் பண்டிதர் "What I want is common sense" என்றார். இவர் "Exactly so sir"—அதாவது "ஆமாம் அப்படித்தான் ஐயா" என்றார். "எனக்கு வேண்டுவது சாதாரண அறிவு" என்று அப் பண்டிதர் தம்மை நோக்கியே சொல்லிக் கொண்டது போல் பொருள் படும் படி மறுமொழி யுரைத்து விட்டார். பிள்ளைகள் கை கொட்டிச் சிரித்தார்கள். பண்டிதர் தலை குனிந்தார்.

பிராமணர்கள் மீசை வைத்துக் கொள்வதில்லை யாயினும், கோயம்புத்தூர் ஜில்லாவிலே பிராமணர்களிற் சிலர் மீசை வைத்துக் கொள்ளுகிறார்கள். இவருக்கும் சுயேச்சை யுண்டாகி விட்டது. பந்துக்களெல்லோரும் ஆட்சேபித்தும் அந்த ஆட்சேபணைகளை பொருட்படுத்தாது இவர் மீசை வைத்துக் கொண்டார். பள்ளிக்கூடத்தில் கோடை கால விடுமுறை விடப்பட்ட பொழுது, இவருடைய தாயார் திண்டுக்கல்லில் தமது தமயனாருடைய கிரகத்துக்கு வந்திருந்ததினால் இவர் அங்கு வந்தார். இங்கே தான் இவருடைய வாழ்க்கையிலே பெரியதொரு மாறுதல் ஏற்படுவதற்கு ஒரு பெரும் காரணமுண்டாயிற்று.

குரு கடாக்ஷம்

இவருடைய ஒன்றுவிட்ட மாமனொருவர் அதி பால்யத்திலேயே பித்துப் பிடித்தவர் போலாகி விட்டார். அவ

ருக்கு மாந்திரீகர்களைக் கொண்டும், வைத்தியர்களைக் கொண்டும் பலவித சிகிச்சைகள் செய்யப்பட்டும் ஒன்றும் பயன் படாமற் போகவே அவரை வெளியே விட்டு விட்டார்கள். அவர் எங்கோ போய் விட்டார். இருபத்தைந்து வருஷங்களுக்குப் பின் அவர் திண்டுக்கல்லில் மறுபடியும் தோன்றினர். பித்தனைப் போலவே தான். கௌபீனம்கூட யில்லாமல் அவர் காணப்பட்டார். அவரை ஒருவரும் கவனியாது இருந்து விட்டார்கள். ஆனல் வர வர தாழ்ந்த வகுப்பா ரெனப்படும் ஜனங்களுக்குள்ளே அவரைப் பற்றிய உண்மை ஏதோ வெளிப்பட ஆரம்பித்து விட்டது. மெல்ல மெல்ல பிராமணர் தவிர மற்ற ஜாதியாரனைவரும் அவரைக் கொண்டாடத் தொடங்கினர்கள். அவரோ ஜனங்களுடன் சரியாக உரையாட மாட்டார். ஒன்று கேட்டால் அவர் ஒன்று சொல்லுவார். காலியாகப் போய்க் கொண்டிருக்கும் வண்டியிலே குடு குடு என்று ஓடித் தாமே ஏறி உட்கார்ந்து கொள்ளுவார். அந்த வண்டிக்காரன் பேசாமலிருந்து விட்டால் தாமே சீக்கிரத்தில் இறங்கிப் போய் விடுவார். அன்று அந்த வண்டிக்காரனுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும். அவன் அவரைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளி வண்டியினின்றும் வெளியேற்றுவானே யானல், அன்று அவனுக்கு ஒரு சவாரி கூடக் கிடையாது. இதே மாதிரி கடைத் தெருவிலே பழமோ, கற்கண்டோ தமக்கு இஷ்டப்பட்ட எதையும் தாராளமாக எடுத்து அங்கு கூடும் பிள்ளைகளுக்கு எறிந்து விடுவார். கடைக்காரன் சும்மா யிருந்து விட்டால் அவனுக்கு அன்று ஏராளமான லாபம் கிடைக்கும். அவன் தடுத்துத் தாறுமாறு சொல்வானைல் அவனுக்கு அன்று வியாபாரமே ஆகாது. ஆனல் எவரேனும் வலிய வருந்திக் கூப்பிட்டால் செல்ல மாட்டார். தாமே இஷ்டப்பட்டால் தான் செல்வார். அவரிடத்தில் பொது ஜனங்களுக்கு

இத்தகைய நம்பிக்கை உதித்து விட்டது. அவர் அவதூத ராய், திகம்பரரா யிருந்தார். எச்சிலையில் நாய்கள் தின்று கொண்டிருந்தால் இவரும் அருகே போய் உட்கார்ந்து, அந்த நாய்களைத் தடவிக் கொடுத்துக்கொண்டே, அந்த எச்சிலையில் தாமும் உண்பார். இவர் உறங்கியதை எவருமே பார்த்ததில்லை. இவருடைய செய்கைகளெல்லாம் லீலைகளாகவே யிருந்தன. இவருக்குச் சகல ஜாதிகளிலும் சகல மதங்களிலும் சிஷ்யர்கள் உண்டு.

ஒருவன் தனக்கு மோக்ஷோபதேசம் செய்ய வேண்டு மென்று இவரை இடை விடாது தொந்தரை செய்து வந்தான். ஒரு நாள் மாலை 8 மணியிருக்கும். இவர் அவனை இட்டுக் கொண்டு திண்டுக்கல்லுக்கடுத்த காட்டுக்குச் சென்று, அங்கு ஒரு புதரினுள் நுழைந்து அவனைக் கீழே உட்கார வைத்து "கண்ணை மூடிக்கொண்டு சிவ, சிவ" என்று சொல்லிக் கொண்டிரு. நான் கூப்பிட்டாலொழிய கண்ணைத் திறவாதே, பயப்படாதே. நானும் இங்கேயே இருக்கிறேன்" என்றார். அவன் அப்படியே கண்களை மூடிக்கொள்ள, அவர் மெல்லச் சந்தடி செய்யாமல் வெளியே வந்து விட்டார். கொஞ்ச நேரம் கழிந்தவுடன் அவனுடைய மனத்திலே பயம் தோன்ற, அவன் மெல்லப் பக்கத்திலே கைகளினால் தடவிப் பார்த்தான். அவர் இல்லாதிருப்பதை யுணர்ந்து கண்களைத் திறந்து பார்த்தான். பயம் மேலிட்டு விட்டது. நடுநடுங்கி அலறிக் கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு வெளியே வந்து சேர்ந்தான்.

இத்தகைய பெரியோருக்கு ஸ்ரீ சிவத்தின் மீது அபரி மிதமான அன்பு விழ ஆரம்பித்து விட்டது. அப்பொழுது ஸ்ரீ சிவத்திற்கு வயது பதினாறு. அவருடைய பெருமையைப் பற்றி அவ்வூரிலேயே சொல்லிக் கொள்வதைக் கேட்டு ஸ்ரீ சிவத்துக்கும் அவர் மீது பரமப் பிரேமை யுண்டாய் விட்டது. ஒரு நாள் இரவு குழந்தைக ளெல்லோரும் தூங்கி

விட்டனர். ஸ்ரீ சிவமும் உறங்கி விட்டார். அப் பெரியார் வாசற் கதவைத் தட்டி, கதவு திறக்க, உள்ளே வந்து "உண்ணச் சோறு போடுங்கள்" என்று கேட்டார். சோற்றிலே தண்ணீர் விட்டிருந்தது. அந்தச் சோற்றை ஒரு இலையிலிட்டு அவருக்கு வைத்து சில ஊறுகாய்களும் பரிமாற, அவர் குழந்தைகளெல்லோரையும் எழுப்பி அவர்களுக்கும் சாதம் போட வேண்டுமென்று சொன்னார். அவ்வாறே எல்லாக் குழந்தைகளுக்கும் இலையில் சோறிடப்பட்டது. பெரியார் தம் முன் வைத்திருந்த சோற்றில் காறிக் காறி நிறைய எச்சிலை யுமிழ்ந்து, அச் சோற்றை நன்ருகப் பிசைந்து குழந்தைகளுக்கு ஆளுக் கொரு பிடி எடுத்து வைக்கும்படி சொன்னர். அந்த எச்சில் சோற்றை ஒரு குழந்தையும் உண்ணவில்லை; ஆனல் ஸ்ரீ சிவம் கொஞ்சமும் யோசியாது அதை யுண்டு விட்டார். ஸ்ரீ சிவம் அப்பொழுது கண்வலியுடன் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். அப் பெரியார் அதைப் பார்த்துத் தமது எச்சில் சோற்றில் கொஞ்சம் எடுத்து ஒரு சிறு துணியிலே வைத்துச் சுற்றிக் கொடுத்து அதைக் கண்ணிலே ஒத்திக் கொள்ளச் சொன்னர். அப்படியே ஸ்ரீ சிவம் செய்ய, மறுநாள் காலையில் கண்வலி சொஸ்தமாகி விட்டது. இதனலெல்லாம் ஸ்ரீசிவத்துக்கு அவரிடத்து அரை விநாடியும் மறவாத அந்தரங்க பக்தி மேலிட்டது. அவருக்கும் அளவற்ற அன்பு உண்டாகி விட்டது. ஸ்ரீ சிவத்துக்கு இவர் மீது இடை விடா ஞாபகம் எற்பட, அவரும் அடிக்கடி இவரிடத்துக்கு வரலாயினர்.

குரு உபதேசம்

பிரபஞ்ச பிரக்ஞை கடுகளவேனும் இல்லாத பித்தராகிய அவர், ஒருதினம் ஸ்ரீ சிவம் இருந்த வீட்டிற்கு வந்து, இவரை மாத்திரம் வெளியி லழைத்து, மற்ற இவரது பந்து ஜனங்களை உள்ளே போகும்படி சொல்லி, கதவை யிழுத்தடைத்து வெளியே தாளிட்டுக்கொண்டு திண்ணையில்

உட்கார்ந்தார். பின்பு ஸ்ரீ சிவத்தைப் பார்த்து "வேஷ்டியை அவிழ்த்து எறிந்து விடு" என்று சொன்னார். 16 வயது பால்யனாகிய ஸ்ரீ சிவம் தெருத் திண்ணையில் எங்ஙனம் வேஷ்டியை அவிழ்த் தெறிந்துவிட்டு நிர்வாணமாய் நிற்பது? அவரது மனம் துணியவில்லை. "யான் கோவணம் உடுத்த வில்லை" என்று சொன்னார். அதற்கு அவர் மறுபடியும் வெகு உரத்த சத்தத்துடன் வேஷ்டியைக் களைந்தெறிந்து விடும்படி ஆக்ஞை செய்தார். ஸ்ரீ சிவம் இதற்கு முந்தியே அவரது மகிமைகளைப் பற்றி கேட்டிருந்தாராதலால், எங்கே சபித்து விடுவாரோவென்று பயந்து, தான் உடுத்தியிருந்த ஆறு முழமுள்ள வேஷ்டியைக் கோவணமாகத் தரித்துக் கொண்டு அவர் எதிரில் நின்றார். அவர் உடனே அடுத்த வீட்டில் போய் ஒரு பஞ்ச பாத்திரத்தில் ஜலம் வாங்கிக் கொண்டு வரச் சொன்னார். ஸ்ரீ சிவம் கோவண உடையுடன் அடுத்த வீட்டு ஸ்திரீகளுக்கு முன்பாய் போவதற்கு வெட்கப் பட்டார். ஆயினும் அவருக்குப் பயந்து அடுத்த வீட்டிற்குள் நுழைந்து, ஒரு கதவின் மூலையில் தனது சரீரத்தை மறைத்துக் கொண்டு, தனது முகத்தை மாத்திரம் அவர்களுக்குக் காண்பித்து ஒரு பஞ்ச பாத்திரத்தில் ஜலம் கேட்டு வாங்கிக் கொண்டு வந்தார். அம் மகான், கையில் பஞ்ச பாத்திரத்தை வாங்கிக் கொண்டு, "இந்த ஜலத்தை நீ குடிக்கிறாயா நான் குடிக்கட்டுமா?" என்று கேட்டார். இவர் "தாங்கள் குடியுங்கள், நானும் கொஞ்சம் குடிக்கிறேன்" என்று சொன்னார். அவர் பாதி குடித்துவிட்டு மிச்சமிருந்ததை ஸ்ரீ சிவத்தைக் குடிக்கச் சொன்னார். இவர் குடிக்கையில் சிறிது ஜலம் பஞ்ச பாத்திரத்தில் இருக்கும் காலத்தில் "நீ குடித்தது போதும்" என்று சிவத்தினிடம் இருந்த பஞ்ச பாத்திரத்தை வாங்கி வழியில் போய்க் கொண்டிருந்த ஒருவனுக்கு மிகுதியாயிருந்த ஜலத்தைக் குடிக்கக் கொடுத்துப் பிறகு அவனைப் போகச் சொல்லி

விட்டு, இவரைப் பஞ்ச பாத்திரத்தை அடுத்த வீட்டில் கொடுத்து விட்டு வரச் சொன்னார். ஸ்ரீ சிவம் முன் போலவே கதவு மூலையில் மறைந்து கொண்டு பாத்திரத்தை எட்டி வைத்துவிட்டுத் திரும்பி வந்து அவரெதிரில் நின்றார். உடனே அவர் சிவத்தைக் கூட வரும்படி சொல்லி விட்டு தெருவிலிறங்கி நடந்தார். கோவணத்துடன் எங்ஙனம் தெருவில் செல்வது? அம் மகானிடத்தில் தனக்குள்ள பயமும் பக்தியும் அவர் பின்னே இழுக்க, அபிமானமும் அவமானமும் தன்னைத் தடுக்க அந் நேரத்தில் ஸ்ரீ சிவத்தின் மனது என்ன பாடுபட்டிருக்கு மென்று வாசகர்களே அனுமானித்துக் கொள்ளலாம். இவர் தலை குனிந்து கொண்டு அவர் பின் சென்றார். அவர் சிறிது தூரம் சென்ற பின் ரஸ்தாவினின்றும் விலகி ஒரு மைதானத்தில் மலபாதை செய்து அம் மலத்தைத் தனது தேகத்தில் அங்கு மிங்கும் பூசிக்கொண்டார். அதனைக் கண்டு அவ்விடத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த சில பிள்ளைகள் அவரை எளனம் செய்து திட்டிக் கல்லாலடித்தார்கள். அவருடன் கோவண மாத்திரம் தரித்து நின்று கொண்டிருந்த ஸ்ரீ சிவத்துக்கும் அவருக்குச் செய்த பூசையில் பங்கு கிடைத்தது. அது ஸ்ரீ சிவத்துக்குப் பிரியமில்லா விடினும், மறுத்தரம் சொல்லாமல் பெற்றுக் கொண்டார். பின்பு அம் மகான் சிவத்தை அழைத்துக் கொண்டு திரும்பவும் ஊருக்குள் செல்லுகையில் சமஸ்கிருத பாஷையிலும் என் னென்னவோ ஸ்ரீ சிவத்துக்குச் சொல்லிக் கொடுத்தார். அவற்றை அப்பொழுதே மறந்து விட்டார்.

ஆனல் அவர்,

"கட்டியணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகியப்பா
யெட்டியடி வைப்பரோ யிறைவா கச்சி யேகம்பனே"

என்ற பாடலை இரண்டு மூன்று தரம் சொல்லிக் கொடுத்தார். இப் பாடல் மாத்திரம் ஸ்ரீ சிவத்தின் இருதயத்தில் வேரூன்ற அக்கால முதல் அவர் மனமானது பிரபஞ்ச தர்மத்தில் வெறுப்படைந்து விட்டது. பின்பு சிவமிருந்த வீட்டு வாசலின் வழியாக அவர் முன்னும் இவர் பின்னுமாகப் போய்க் கொண்டிருக்கையில், இவர் மிக வெட்கப்பட்டு அவருக்குத் தெரியாமல் திடீரென்று வீட்டிற்குள் நுழைந்து கொண்டார். அவர் அன்று சாயங்காலம் மறுபடியும் வந்து "உனக்கு அவ்வளவு தான்" என்று சொன்னார். அக் காலத்தில் இவ் விஷயத்தைப் பற்றி ஸ்ரீ சிவம் அதிகமாக கவனிக்கவில்லை. அம் மகாத்மா தன்னை அழைத்தது, தான் வெட்கப்பட்டுப் பின் வாங்கினது முதலாய சங்கதிகளை நினைத்து நினைத்து, அவர் "உனக்கு அவ்வளவு தான்" என்று சொல்லும்படியா யிருந்ததற்குள்ள தனது மனேபரிபாக மில்லாமைக்காக கடைசிவரை ஏக்கமுற்றுத் திரா வருத்த மடைந்திருக்கின்றார். அவரது திவ்ய தரிசனம் ஸ்ரீ சிவத்துக்குக் கிடைத்தது முதல் இவரது வாழ்நாள் இவரால் கணிக்கப்படாமல், அவரது தியாகோபதேசமாகிய அப் பாடலாலேயே நடைபெற்று வந்தது. இப் பெரியாரே ஸ்ரீ சிவத்தினுடைய வாழ்க்கையில் சந்யாஸ தர்மத்தைப் புகுத்தி ஸ்ரீ சிவத்தை ஏகாங்கி யாக்கி விட்டார்.

காளைப் பருவம்

பின்னர் ஸ்ரீ சிவம் மறுபடியும் திருவனந்தபுரம் வர வேண்டியதாயிற்று. இப்பொழுது இவருக்கு தைரியம் மேன் மேலும் அதிகமாயிற்று. குழந்தைப் பருவத்திலே விளையாட்டுக்களிலே பிரியமில்லாதவர். துஷ்டர்களுடனே சேராதவர். இப்பொழுது விளையாட்டுக்களிலே மும்முரமாக புகுந்து விட்டார். முகமதியர்களுடனே சகவாசம் செய்யத் தொடங்கி குஸ்தி, சிலம்பம் முதலிய சரீராப்பியாசங்

களிலே கை தேர்ந்து விட்டார். இரவும் பகலும் துஷ்டர் களுடைய சகவாசமே யாயிற்று. எப்பொழுது பார்த் தாலும் எவருடனுவது "அடிபிடி" தான். தம்மையொத்த வயதுப் பிள்ளைகள் பலரையும் சகபாடிகளாகக் கொண்டு, அவர்களுக்குத் தலைமை வகித்து வந்தார். இவர் வீட்டுக்குப் போவதில்லை. தனியே மேல்மாடி யொன்று வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதில் இவரும் இவரது சகபாடிகளும் கூடியாடி ஆர்ப்பரித்து வசித்து வந்தனர். எத்தனையோ தடவைகளில் "அடிபிடி" குற்றங்களுக்காக இவரைப் போலீஸார் பிடித்துச் சென்றிருக்கின்றனர். அத்தனை தடவைகளிலும் இவருடைய பிதா சென்று பரிந்து பேசி இவரை விடுவித்து வந்திருக்கின்றனர். ஒரு தரம் இவர் மீது நீதி ஸ்தலத்திலும் வழக்குத் தொடரப் பட்டது. அதிலும் தந்திரம் செய்து எதிர்க் கட்சியுடன் ராஜி செய்து கொண் டனர். இவருடைய விளையாட்டுச் செயல்களிலே இங்கு இரண்டொன்று குறிப்பிடுகிறேன்.

ஒரு சமயம் இவரும் இவருடைய சகாக்களுமாகச் சேர்ந்து மாந்தோப்பு ஒன்றிலே சென்று மாம்பழம் பறித் தார்கள். இவர் மரத்தின் மீது ஏறியிருந்தார். தோட்டக் காரன் மெல்லச் சென்று அருகிலிருந்த ஒரு போலீஸ்காரனை யிட்டுக்கொண்டு வந்துவிட்டான். போலீஸ்காரனைக் கண்டவுடனே கீழே யிருந்த பிள்ளைகளெல்லோரும் ஓடி விட்டனர். போலீஸ்காரன் இவர் ஏறியிருந்த மரத்துக் கிளையின் கீழே வந்து நின்று கொண்டு இவரை இறங்கச் சொன்னன். இவர் தாம் கீழே குதித்து விடுவதாகவும் அவன் கொஞ்சம் ஒதுங்கி நிற்கும்படியும் கூற, அவன் அவ்வாறே செய்ய, இவர் கிளையைப் பிடித்துக் கொண்டு ஊசலாடுவது போல் ஆடி அவன் மார்பில் ஓர் உதை உதைத்துவிட்டுத் திடீரென்று கீழேகுதித்து ஓட்டம்பிடித்து

விட்டார். உதையினல் கீழே விழுந்த போலீஸ்காரன் எழுந்திருப்பதற்குள் இவர் ஓடியே போய்விட்டார்.

இன்னெரு சமயத்தில் இவரும் இவரது சகாக்களும் ஒருவனை, அவன் கொஞ்சம் பலசாலியா யிருந்து கொண்டு சிறு பிள்ளைகளை இம்சித்து வந்ததினல், அடிப்பதாகத் தீர்மானித்தார்கள். ஒரு நாள் இரவு சுமார் 12 மணி இருக்கும். அவன் ஒரு திண்ணையில் ஐந்தாறு பேர்களுக்கு நடுவே படுத்திருந்தான். இவர், அங்கு படுத்துக்கொண் டிருந்தவர்களுள் அவன் எவன் என்று தெரியாதபடியினல், ஒவ்வொருவர் பக்கத்திலும் படுத்திருந்து மெல்ல போர்வை யைத் தூக்கிப் பார்த்து, கடைசியாக அவனைக் கண்டு கொண்டு, அவன் பக்கத்தில் உட்கார்ந்து அவனுடைய கழுத்துக்குக் கீழே தனது இடது கையைக் கொடுத்து, அவனைச் சட்டென்று உட்காரவைத்து, அறை அறை யென்று அறைந்துவிட்டு ஓடிவிட்டார். அவனை உட்கார வைத்து அடித்ததற்குக் காரணம், தூங்குகிறவனை அடிக்கக் கூடாதென்று யுத்த தர்மம் கூறுகின்றதாம்.

இவர் குடியிருந்த தெருவிலுள்ளவர்கள் விசேஷ காலங்களில் இவரது கூட்டத்தாரின் செலவுக்காக இவர் போய் ஏதாவது பணம் கேட்டால் கொடுக்க வேண்டும். அதற்கு யார் மறுக்கிறுர்களோ அவர்கள்பாடு திண்டாட் டந்தான். அதிகாலையில் எல்லோருக்கும் முன்பாக இவர் எழுந்திருந்து ஒருவர் கண்ணிலும் படாமல், யார் யார் இக் கூட்டத்தை வெறுத்தார்களோ அவர்கள் வீடுகளுக்குப் போய் வாசற் கதவுமுன் சங்கிலியை இழுத்து கொண்டியில் மாட்டி ஆப்பைச் சொருகி நன்ருக அடித்துவிட்டு வந்து விடுவார். வழக்கம்போல் வீட்டிலுள்ளவர்கள் அதிகாலை யில் எழுந்திருந்து கதவு திறந்தால் திறக்காது. காரணம் தெரிந்ததே! எவ்வளவு சத்தம் போட்டாலும் அக்கம் பக்கத்திலுள்ளவர் போய்த் திறக்கவும் துணியமாட்

டார்கள். கடைசியில் அந்த வீட்டார் ஸ்ரீ சிவத்துடன் ராஜிசெய்து கொள்வார்கள். இப்படியே பல சேஷ்டைகள்.

குடும்ப வாழ்க்கை

இவ்வாறு ஸ்ரீ சிவம் கவலையின்றிக் காலம் கழித்து வருகையில் அன்னார் மனைவியார் வீட்டிற்கு வந்துவிட்டார். குடும்பப் பொறுப்பை இவர் வசம் ஒப்புவிக்க வேண்டு மென்று தகப்பனார் எண்ணி, "நீ ஏதாவது உத்தியோகம் பார்க்க வேண்டாமா? இப்படி எத்தனை நாளைக்குத் திரிய முடியும் என்று சிவத்திடம் அடிக்கடி சொல்லிவந்தார். யாதொரு விதமான கவலையு மின்றி இஷ்டம் போல் சுற்றித் திரிந்த சிவம் கட்டுக்கு உட்பட வேண்டிய தாயிற்று. எல்லோரையும் போலவே சிவமும் தமது பெற்றோரிடம், "உங்களை யார் கல்யாணம் பண்ணி வைக்கச் சொன்னது? அதிலும் பெண்ணின் குணத்தைப் பார்த்தாலே மிகவும் பயமா யிருக்கிறது; "சிவம் மனைவி யார் சிறிது முரட்டு ஸ்வபாவமுடையவர். "சர்க்கஸில் சிங்கம், புலி, யானை, கரடி முதலிய துஷ்ட ஜந்துக்களைக் கூட அடக்கி ஒடுக்கி விடுகிறார்கள்; நான் என்ன செய்யப் போகிறேனோ?" என்று சொல்லுவார். கடைசியாக "ஏதாவது வேலைபார்க்க வேண்டியது தான்" என்ற முடிவுக்கு வந்தார். இவர் மைத்துனி புருஷன் ஒருவர் போலீஸ் இலாகாவில் வேலைபார்த்து வந்தார். அவர் சிபார்ஸின் பேரில் இராமநாதபுரம் ஜில்லா "சிவகாசி போலீஸ் சூப்பிரண்டெண்ட் ஆபீஸில்" ஒரு குமாஸ்தா வேலை கிடைத்தது. முதல் நாள் ஆபீஸுக்குச் சென்றார். ஒரு நாள் கட்டுப்பட்டுக் கிடப்பது ஒரு யுகம் போல் சிவத்துக்குத் தோன்றிற்று. மறுநாள் இவரை டாக்டர் சர்டிபிகேட் வாங்கிவரச் சொன்னார்கள். "மனிதன் சுதந்திரம் பெற வேண்டும், நாடு விடுதலை யடைய

வேண்டும்'' என்று இரவு பகல் ஓயாமல் உழைத்து தியாகம் செய்து நாட்டு மக்களுக்கு வழிகாட்டப்போகும் சிவமா ஒருவரிடம் அடங்கி வேலை பார்க்க முடியும்? அது இயற்கைக்கு விரோத மன்றோ! மறுநாளே சொல்லாமல் கிளம்பிவிட்டார் திருவனந்தபுரத்திற்கு.

வேதாந்த மார்க்கம்

அப்பொழுது திருவனந்தபுரத்திலுள்ள கொட்டாரக் கரையில் நாயர் வகுப்பைச் சேர்ந்த ஓர் சந்யாஸி இருந் தார். வேதாந்த சாஸ்திரத்தில் நிபுணர்; இராஜ யோகத்தில் பயிற்சியுண்டு. பேச்சுவன்மை யுடையவர்; வைத்தியத்தில் தேர்ந்தவர். 1902-ஆம் வருஷம் அன்னாரைத் தரிசிக்கும் பாக்யம் சிவத்திற்குக் கிடைத்தது. எற்கனவே திண்டுக் கல்லில் மகாசமாதி யடைந்திருக்கும் சுப்பையா சுவாமிகள் என்னும் ஓதஸ்வாமிகள் அனுக்கிரகம் பெற்றுள்ள சிவத் திற்கு ஸ்ரீ சதானந்த சுவாமிகளின் திருவருள் சீக்கிரமே கிட்டியது. அடிக்கடி சிவம் போய் அவரிடம் வேதாந்தப் பிரசங்கங்கள் கேட்டு வந்தார். வர வர அப்பெரியாரை விட்டு நீங்குவதே கிடையாது. அவரைப் பின்பற்றி வந்த பல சிஷ்யர்களில் ஸ்ரீ சிவமே முதல்வராகக் காணப்பட்டார். அவருடன் ஊரூராகச் சுற்றவும் தலைப்பட்டார். வீட்டார் கவலை கொண்டார்கள். இவர் இருக்குமிடம் தெரிந்தால் அங்கே இவர் மனைவியார் போய்ச் சேர்ந்துவிடுவார்; உடனே சிவம் வேறு இடம் போய் விடுவார். இப்படிப் பல சமயங்களில் நடந்திருக்கின்றது. இஷ்டப்பட்டால் சிவம் தானே வீடு போவார். ஒருதரம் சிவம் வந்த சமயம் இவர் தகப்பனார் அரையணாவைக் கையில் கொடுத்து ''கீரைத் தண்டு வாங்கி வா'' என்றார். அன்னார் கடைக் குப்போய் ஒரு பாகம் நீளமும் பருமனுமான இரண்டு கீரைத் தண்டுகள் வாங்கி வந்தார். ''சமையலுக்கு லாயக்

இல்லை. சண்டைக்கு லாயக்கானது.'' தகப்பனார் பார்த்தார். "உணவுக்கும் வீட்டுக்கும் தகுந்தவாறு வாங்கிவரவில்லையே; உனக்கு வயதாகி என்ன பிரயோஜனம்? குடுபத்திலிருந்தா லல்லவோ அதன் பொறுப்பு தெரியும்'' என்று கடுகடுத்துப் பேசி, கீரைத் தண்டைப் பிடுங்கி அதனால் ஒரு அடி கோபத்தில் அடித்துவிட்டார். சிவத்திற்கு தாங்கொணா வருத்தம் உண்டாகி விட்டது. ஒன்றும் சொல்லவில்லை; யோசித்தார்! சிறிது நேரம் கழித்து வீட்டை விட்டு ஒருவருக்கும் சொல்லாமல் வெளியேறி விட்டார். எங்கு சென்றார் என்று யாருக்கும் தெரியாது!

வைராக்கிய நிலை

1907-ம் வருஷம் வரை இவர் குருநாதர் ஸ்ரீ சதானந்த சுவாமிகளுடனே சுற்றித் திரிந்தார். ராஜ யோகமும் சிறிது பயின்றார். இவர் அனுபவத்தைச் சிறைக்குள் எழுதிய 'சச்சிதானந்த சிவம்' என்ற புத்தகத்தைப் படித்தால் தெரியவரும். நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. குடும்பக் கஷ்டங்கள் சொல்லி முடியாது. நாளடைவில் சிவத்தின் தகப்பனார் நோய்வாய்ப்பட்டார்; யமனுடன் போராடிக்கொண்டிருந்தார். படுத்த படுக்கை. சதா மூத்த மகன் சிவத்தின் ஞாபகந்தான். உயிர் போவதற்குள் சிவத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல். இறைவன் அன்னார் ஆசையைக் கடைசியில் பூர்த்தி செய்தேவைத்தார். சிவத்தின் தாயார் அடிக்கடி தங்களுக்கு வேண்டியவர்களிடம் "எங்காவது சிவத்தைப் பார்த்தால் தகப்பனார் நிலையைச் சொல்லி எப்படியும் வீட்டிற்கு வரச்சொல்ல வேண்டும்'' என்று சொல்லி யனுப்பிக்கொண்டே யிருந்தார். யாரோ ஓர் நண்பர், ஒரு நாள் அகஸ்மாத்தாக வைக்கத்தில் சிவத்தைச் சந்தித்து, வீட்டின் நிலையையும் முக்கியமாக தகப்பனார் ஸ்திதியையும் எடுத்துரைத்தார்.

அதற்கு சிவம் "அந்தச் சமயம் தனக்குத் தெரியும்" என்று சொல்லிப் போய்விட்டார்.

சாது

திடீரென்று ஒரு நாள் அதிகாலை நீண்டு அடர்ந்த தாடி மீசையுடன் சிவம் வீடுவந்து சேர்ந்தார். வாசத் திண்ணையில் உட்கார்ந்திருந்த சகோதரிக்கோ, உள்ளே தகப்பனார் பக்கத்தில் உட்கார்ந்து சிசுருஷை செய்து கொண்டிருந்த தாயாருக்கோ இவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. "யாரோ வைத்தியர் வந்திருக்கிறார் பார்ப்பதற்கு" என்று எண்ணினார்கள். சிவம் தகப்பனாரைப் பார்த்தார்; அப்பா! என்று அன்னார் தலையைத் தூக்கி தனது மடியில் வைத்துக்கொண்டு தடவிக் கொடுத்தார். அனைவர் ஆச்சரியமும் சொல்லி முடியாது. தகப்பனாரும் "வந்தாயா அப்பா! எனது ஆசையை ஈசன் நிறைவேற்றி வைத்தார்; இப்பொழுதுதான் என் மனது சாந்தி யடைந்தது" என்றார். சிறிது நேரத்தில் நிம்மதியாக அன்னார் சர்வேஸ்வரன் திருவடியடைந்தார். மேற்கொண்டு காரியம் ஆகவேண்டும். குடும்பம் வெகு நாளாக ஏழ்மையில் ஆழ்ந்திருந்தது. சிவத்தினிடம் காசோ பணமோ கிடையாது. வீட்டார் 'என்ன அப்பா செய்கிறது' என்றார்கள். வீட்டில் — தாயார், மனைவி, இரண்டு தங்கைகள், ஒரு தம்பி ஆகியவர்களிடம் சிவம் "மகா சக்தி கொடுப்பாள்! ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு தெருத் திண்ணையில் போய் உட்கார்ந்துகொண்டுவிட்டார். பூரணமாக நம்பின சிவத்தை மகா சக்தி சோதிப்பாளா? திடீரென்று வண்டியொன்று வீட்டு வாயிலில் வந்து நின்றது. வயதான இருவர் கீழே இறங்கினர். சிவத்தின் தகப்பனார் அபாய நிலைமையிலிருக்கிறார் என்று தகவல் தெரிந்த அன்னார்

மாமனும்—மாமியும் திண்டுக்கல்லிலிருந்து சுமார் 300 ரூபாயுடன் வந்துசேர்ந்தனர்; கிரியைகளெல்லாம் நடந்தேறின. ஒரு வருடம் சிவம் எங்கும் செல்லவில்லை.

தேசீய ஆர்வம்

1906-ம் ஆ வங்காளப் பிரிவினை சுதேசக் கிளர்ச்சி, கல்கத்தா காங்கிரஸ் சுயராஜ்யத் தீர்மானம், விபினசந்திர பாலர் வீரப் பிரசங்கங்கள், லஜபதியும்—அஜித் சிங்கும் நாடு கடத்தப்படல், அரவிந்தர் — திலகர் பேரில் வழக்குகள். இவைகள் ஒன்றன் பின் ஒன்றாக நாட்டிலே நடந்தேறின. ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீ தாகூர்க்கான் சந்திரவர்மா தேச முழுதும் சுற்றிப் பிரசங்கம் செய்துவந்தார். அன்னார் திருவனந்தபுரத்திலும் வந்து சில கூட்டங்கள் போட்டுப் பேசினார். சிவம் அக் கூட்டங்களுக்குச் சென்று விஷயத்தைக் கவனித்தார். நாட்டில் இவ்வளவு அக்கிரமங்கள் நடக்கின்றனவா? என்பதை எண்ணி எண்ணி ஆராத் துயருற்றார். அன்று முதல் பத்திரிகை படிக்கத் தவறுவதே கிடையாது. ‘தர்ம பரிபாலன சமாஜம்’ என்ற ஸ்தாபனம் ஏற்படுத்தி வெள்ளி தோறும் வீட்டிலே தனது சகோதரியிடம் ஓர் இடத்தை சுத்தமாக மெழுகச் சொல்லி கோலம்போடச் செய்வார். மாலையில் தனது நண்பர்களை அழைத்துவந்து கூட்டம் போட்டு அரசியல் விஷயங்களைப்பற்றிப் பேசுவார். தனது சகோதரியிடம் தேசிய கீதம் பாடச் சொல்லிக் கேட்பார். அன்னாரை யொத்த சிறுமிகளைக் கூப்பிட்டு தேசியப் பாட்டுப் பாடிக் கும்மியடிக்கச் சொல்லுவார். பாவாடை — சித்தாடைகளில் வந்தேமாதரம் என்று நூலால் இழை போடச் சொல்வார். தானும் வெளியே சில கூட்டங்கள் போட்டு பேசத் துவக்கினார். பேச்சு ஜனங்களின் மனதைக் கவர்ந்தது. அதிகாரிகள் பார்த்

தார்கள்; சிவத்தை சமஸ்தானத்தை விட்டு வெளியே போகும்படி சமஸ்தான சர்க்கார் உத்தரவு போட்டார்கள்.

பிரசாரம்

சிவம் கால் நடையாகவே கிராமம் கிராமமாகச் சென்று, நாட்டு நடப்பை பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டு திருநெல்வேலி வந்து சேர்ந்தனர். ஒரே வேஷ்டி, ஜிப்பா, தலைப்பாகை, கைத்தடி இவைகள் தான் அவருடைய சொத்து. திருநெல்வேலி பெரிய நகர். ஊரைச் சுற்றி வந்தார். கடைவீதியில் "சுதேசி பண்டக சாலை" (National Emporium) என்ற பெயருடன் ஒரு கடை நடைபெற்று வந்தது. அதற்குள் சென்றார். இவர் வரவைப் பார்த்து அங்கு சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்த ஒருவர், சிவத்தின் உணர்ச்சி ததும்பும் பிரசங்கத்தை கடையநல்லூரில் ஏற்கனவே கேட்டுள்ளா ராதலினால், சிவத்தை கடைச் சொந்தக்காரர் ஸ்ரீ சங்கரநாராயணைய ருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அக் காலம் தூத்துக் குடி வக்கீல் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை பல நணபர்க ளுடைய உதவியால் பங்கு திரட்டி இரண்டு "சுதேசிக் கப்பல்கள்" வாங்கி தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் ஓட்டி வந்தார். வங்கத்தின் எதிரொலி குமரிவரைகேட்டது. குமரி குமுறிக்கொண்டு எழுந்தது.

புதிய ஆதர்சம்

நாடெங்கும் "சுதேசி, அன்னியச்சாமான் பஹிஷ் காரம், நாட்டுக் கல்வி, சுயராஜ்யம்" என்ற விஷயங்களை "ஹிந்து, சுதேசமித்திரன்" ஸ்தாபகர் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் எடுத்துரைத்துவந்தார். கவியரசு ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதி தென்னாட்டில் தீவிரக் கட்சிக்குத் தலைமை தாங்கி நடத்திவந்தார். அன்னார் சென்னையில் நடத்திய 'இந்தியா'

பத்திரிகையும் நாட்டுக் கிளர்ச்சிக்குப் புதிய உத்வேகத்துடன் பங்கு கொண்டது. பாரதியின் முயற்சியால் சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடைபெற்ற ஸ்ரீ விபின சந்திரபாலர் பிரசங்கங்களால் சென்னை மாகாணம் வீறுகொண் டெழுந்தது. இதில் தீவிரப் பங்கெடுத்துக்கொண்டு சிறை சென்றவர்கள், ஆந்திர தேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஹரி சர்வோத்தம ராவ், சென்னை வாசி யதிராஜ் சுரேந்திரநாத் ஆர்யா, காஞ்சிபுரம் ஸ்ரீ கிருஷ்ணசாமி சர்மா ஆகியோர் தூத்துக்குடி போலீஸ் இலாகாவில் வேலைபார்த்துவந்த ஹேட் குருநாத அய்யர் சுதேசிக் கிளர்ச்சிக்குப் பக்க பலமாக விருந்து தண்டிக்கப் பட்டார்.

அன்னருக்கு ஜனங்களிடையே மிகுந்த செல்வாக்கு உண்டு. அந்தச் சமயம் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் வீடு தேச பக்தர்களுக்கு அன்ன சத்திரமாக விளங்கியது. இச் சுதேசக் கிளர்ச்சியில், திருநெல்வேலி சங்கரநாராயணய்யரும் தீவிர பங்கெடுத் துழைத்துவந்தா ராதலினல், சிவத்தைப் பார்த்ததும் பேரானந்தங்கொண்டு திருநெல்வேலியில் சில நாட்கள் தங்கி பிரசங்கங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். வெகுநாள் பரியந்தம் ஒரே உடையுடன் சிவம் காலங்கழித்துவந்தினல் அவருக்கு வேண்டிய உடையில் ஒவ்வொரு ஜதை உடனே எடுத்துக் கொடுத்தார்.

திருநெல்வேலியில் கூட்டம்

அன்று மாலையிலேயே பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்தார். முதல் நாள் மறு நாள் 500. மூன்றும் நாள் 1000. அடுத்த தினம் 5000. இப்படிக் கூட்டம் பெருகிக் கொண்டே வந்தது. ஸ்ரீ சிவத்தின் சிம்ம கர்ஜனை திருநெல்வேலி ஜில்லா முழுதும் பேரொலி செய்தது. சிறிது நாளில்

சுதேசிக் கிளர்ச்சிக்கு நடு நாயகமாய் விளங்கிய ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை தூத்துக்குடியில் கண்டார். இவரது சேர்க்கை நெருப்புக்குக் காற்றுப் போலாயிற்று. ஒவ்வொரு கூட்டத்திலும் இருவரின் பிரசங்க கோஷம், சுதேசி வெள்ளம் எங்கும் பெருக்கெடுத்து ஓடத் தலைப்பட்டது. ஒரு சமயம் பாரதியும் சென்னையிலிருந்து தூத்துக்குடி வந்தார். அப்பொழுதுதான் சிவம் பாரதிக்கு அறிமுகம் செய்விக்கப் பட்டார். இவரது உணர்ச்சி வெள்ளத்தைக் கண்டு பாரதி, சிவத்தை, "சிவாஜி" என்று கட்டிக் கொண்டார். சுதேசி சாமான்களையே ஜனங்கள் வாங்கத் தலைப்பட்டனர். கொழும்புக்குப் போகும் ஜனங்கள் சுதேசிக் கப்பலிலேயே ஏறிப் போயினர். மில்லில் வேலை செய்யும் தொழிலாளர் உற்சாகத்திற்கு எல்லையே யில்லை. சர்க்கார் அதிகாரிகளும், அன்னிய வியாபாரிகளும் நடுங்கினர். என்ன செய்வதென்று தெரியவில்லை. அவ்வமயம் தூத்துக்குடியிலிருந்த ஆங்கிலேயர்கள் எது நடக்குமோ வென்று பயந்து இரவுப் பொழுதை 7, 8 மைல் தூரத்தில் நங்கூரம் பாய்ச்சப் பெற்ற ஸ்டீமரில் போய்க் கழித்து வந்தனர். இப்படியே மூன்று மாத காலம் நடந்தது.

தூத்துக்குடியில் கொந்தளிப்பு

அப்பொழுது வங்காளத்தில் தேசபந்து சித்தரஞ்சன தாஸரால் நடத்தி வந்த அரவிந்த கோஷ் வழக்கில் சர்க்கார் தரப்பில் விபின சந்திர பாலர் சாட்சியம் கொடுக்க மறுத்து விட்டார். அதன் பயனாக அன்னார் 6 மாதம் கடுங்காவல் தண்டனை யடைந்தார். தண்டனை யடைந்து விடுதலை யடையும் தினம் வந்தது. பாலர் விடுதலை தினத்தை நாடெங்கும் கொண்டாட ஏற்பாடு செய்தனர். தூத்துக்குடியும், திருநெல்வேலியும் இத்தினத்தைக் கொண்டாடப் பின் வாங்க வில்லை. இதைப் பார்த்த அதிகாரிகள் இதை

எவ்வாறு தடுக்கலாமென்று யோசனை செய்தனர். அப்பொழுது திருநெல்வேலி கலெக்டர் விஞ்ச், சப் கலெக்டர் ஆஷ், இவர் 1911-ல் திருநெல்வேலி கலெக்டராய்வந்த சமயம் மணியாச்சி ஜங்ஷனில் பட்டப் பகலில் வான்சி ஐயன் என்ற பிராமணச் சிறுவனால் சுடுபட்டு இறந்தது ஞாபகமிருக்கும். இவர்தான் சுதேசிக் கிளர்ச்சியை முதன் முதலில் தூத்துக்குடியில் அடக்க ஆரம்பித்தார்.

108 ஜாமீன் வழக்கு

தமிழ்த் தாயின் இரு நேத்திரங்களான சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவம் இருவர் பேரிலும் 108 ஜாமீன் வழக்கு தொடரப் பெற்றது. திருநெல்வேலியிலே வழக்கு விசாரணை. காலையில் இருவரும் தூத்துக்குடியிலிருந்து போவார்கள். மாலையில் வந்து விடுவார்கள். ஜனங்களின் உற்சாகத்திற்கும் ஊக்கத்திற்கும் எல்லையில்லை. கோர்ட்டிலே, ரயிலடியிலே, பொதுக் கூட்டத்திலே எங்கே பார்த்தாலும் ஜனத்திரள். ஒரு தினம் திருநெல்வேலி தாம்பரபரணி ஆற்றங்கரையில் பொதுக்கூட்டம். மறு தினம் தூத்துக்குடி கடற்கரையில் பிரசங்கம். மில் தொழிலாளர் ஏராளமாக வருவார்கள். திடீரென்று விபின சந்திர பாலர் விடுதலை தினத்தன்று இரு தலைவர்களையும் தூத்துக்குடியில் அதிகாரிகள் கைது செய்து திருநெல்வேலி கொண்டு போயினர். விஷயம் காட்டுத் தீ போல் எங்கும் பரவிற்று. கடைகளெல்லாம் அடைக்கப் பட்டன. தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். தூத்துக்குடியில் யாதொரு கூட்டமும் பொது இடங்களில் நடத்தக் கூடாதென்று தடை உத்திரவு போட்டனர். திருநெல்வேலியிலோ அன்று மாலை பாலர் படத்துடன் பெரிய ஊர்வலம். கடைசியில் பொதுக் கூட்டம். மாணவர்களும், பொது ஜனங்களும் காட்டிய உற்சாகத்திற்கு அளவே கிடையாது. தூத்துக்

குடியில் தடை ஏற்பட்டதினால், ஜனங்கள் எவ்விதத்திலும் எங்காவது கொண்டாடி விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டனர்.

விபின சந்திர பாலர் தினம்

அத்தினம், மறுநாட் காலை ஓர் பெரிய வண்டிப் பேட்டையில் நடந்தது. அதையும் போய்க் கலைப்பதற்கு அதிகாரிகள் முயற்சித்தனர். சப் கலெக்டரே நேரில் சென்றார். போலீஸ் அதிகாரிகள் குழப்பம் செய்து பார்த்தனர். ஜனங்கள் பிடிவாதமாகவும், தைரியமாகவும் இருந்து கூட்டத்தை நடத்தி விட்டனர். பின்னால் இரு தலைவர்களும் விடுவிக்கப் பட்டனர். இவர்கள் பாளையங் கோட்டையில் ரிமாண்டிலிருந்த சமயம், திருநெல்வேலியில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் ஹெட் கான்ஸ்டேபிள் வேலையை ராஜீநாமாச் செய்துவிட்டு சுதேசி இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்ட குருநாதையர், "நமது இரு நேத்திரங்களான தலைவர்கள் நேற்று நம் முடன் வெளியே இருந்தார்கள். இன்று நம்மைவிட்டுப் பிரிந்து உள்ளே சென்று விட்டனர். நாளை நாம் எவ் விதத்திலும் நம்மிடம் கொண்டு வரவேண்டும்" என்று ஆக்ரோஷத்துடன் அங்கு கூடியிருந்த ஆயிரக் கணக்கான ஜனங்களிடத்தில் சொன்னார். அப்பொழுது ஜனங்களுக் கிருந்த ஆவேசம் எல்லையற்று விட்டது. மறுநாட் காலை நாலு பக்கங்களிலிருந்தும் கிராம வாசிகள் திருநெல்வேலி வந்து சேர்ந்து கொண்டேயிருந்தனர். எல்லா ஜனங் களும் ஒன்று சேர்ந்து பாளையங்கோட்டை போய் சிறை யிலிருந்து தலைவர்களை விடுவித்துக்கொண்டு வரவேண்டு மென்பது சில முக்கியஸ்தர்களுடைய எண்ணம். ஆனால் விஷயம் வேறு விதமாய் முடிந்தது.

திருநெல்வேலிக் கலகம்

பகல் 10-30 மணியிருக்கும். நாலு பக்கங்களிலிருந்து வரும் ஹிந்து காலேஜ் ஆசிரியர் ஸ்ரீ லோகநாதையர், M. A., L. T. பிரின்ஸிபாலிடம் போய் (இவர் ஒரு ஆங்கிலேயர்) ஊரில் என்ன நடக்குமோ தெரியாது? காலேஜை இன்று அடைத்து விடலாம். தாங்கள் சிறிது நேரத்திற்கு ஓர் அறையில் போய்ச் சாவதானமாயிருங்கள்'' என்று சொன்னார். ஊரின் எழுச்சியைக் கண்ட பிரின்ஸிபாலும் சம்மதித்தார். ஸ்ரீ லோகநாதையர் தேச வெறி பிடித்தவர். சுதந்திர ஆர்வங் கொண்டவர். சுதேசியத்தைப் பற்றி பல கூட்டங்களில் பேசி வந்திருக்கிறார். மாணவர்களிடையே இவருக்கு அபார செல்வாக்குண்டு. எல்லா மாணவர்களையும் ஒன்று சேர்த்தார். "இன்று நாம் சுதந்திரம் அடைந்து விட்டோம்'' என்று ஓங்கி ஓர் அறை மேஜையில் அறைந்து "இன்று காலேஜுக்கு விடுமுறை. நாமும் கிளர்ச்சியில் சேர்ந்து நமது கடமையைச் செய்ய வேண்டும்'' என்று கூறி மாணவர்களுடன் வெளியே வந்து ஜனக் கூட்டத்துடனே சேர்ந்து கொண்டார்.

மாணவர் ஆவேசம்

ஜனங்களிடையே ஹேட் குருநாதையரும், நேஷனல் எம்போரியம் சங்கரநாராயணையரும், திருவனந்தபுரம் பத்பநாப பிள்ளையும் இருந்தது குறிப்பிடத் தக்கது. இவர்களெல்லோரும் பின்னால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பாளையங்கோட்டையை நோக்கிச் செல்லவேண்டிய கூட்டம் எதிர்பாராத விதமாய் திருநேல்வேலி ஜங்ஷனிலிருந்து, திருநெல்வேலி டவுன் நோக்கிப் புறப்பட்டது. கூட்டம் கட்டுக்கடங்கவில்லை. ஆவேசம் கொந்தளித் தெழுந்தது. ஸி. எம். எஸ். காலேஜ், டிரெயினிங் ஸ்கூல் மாணவர்களும் கலந்து கொண்டனர். பொங்கி யெழுந்த புரட்சி

வெள்ளத்தின் செய்கை ஒழுங்கு, கட்டுபாடு இல்லாததினல் பலாத்காரத்தில் போய் முடிந்தது. ரோட்டிலுள்ள ராந்தல்க ளெல்லாம் தவிடுபொடி. முனிசிபல் ஆபீஸ் அடுத்திருந்த சப்ரிஜிஸ்தரார் ஆபீஸ் இரண்டும் தீக்கிரை யாயிற்று. ஒரே ஆவேசம்; ஒரே கொந்தளிப்பு; ஒரே குழப்பம். போலீ ஸால் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை. ரிசர்வ்படை டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட் தலைமையின்கீழ் வந்து சேர்ந் தது. எச்சரித்தும் பயன்படவில்லை. எப்பொழுதுமே ஒரு ஜனசமூகத்தில் வேண்டுமென்றே அக்கிரமஞ் செய்யும் சில விஷமிகள் இருப்பார்கள். அவர்களை என்ன செய்வது? சிலர் சில கற்களை எடுத்து ரிசர்வ் படையின்மேல் எறிந் தனர்; அவ்வளவுதான். தலைமை அதிகாரிகளுக்கு வந்து விட்டது கோபம். சுற்றுமுற்றும் பார்த்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம்

அச்சமயம் கோயிலுக்குப் போய் சுவாமிதரிசனம் செய்துவிட்டு ஈர வேஷ்டியுடனும், தேங்காய் பிரசாதத் துடனும் தூரத்தில் வந்து கொண்டிருந்த ஒருவர், மடியி லிருந்த தேங்காய் மூடி கீழே விழ, அதை எடுப்பதற்காகக் குனிந்தார். தூரத்தில் நின்று சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருந்த தலைமை யதிகாரி இதைப் பார்த்தார். உடனே சுடும்படி உத்தரவிட்டார். அவ்வளவுதான் தாமதம். குண்டானது நிரபராதியான பக்தரின் உடலில் பாய்ந்து சென்றது. உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. அந்தோ! பரிதாபம்!! கடைசியாகக் கூட்டத்தி லிருந்த பல பேர்களைக் கைது செய்தனர். ஒரு இடத்தில் கூட்டம் கலைக்கப்பட்டால் இன்னொரு இடத்தில் கூட்டத்தைக் காணலாம். அங்கே போய் அதிகாரிகள் கலைத்தால் மற்றொரு இடத்தில் கூட்டம் போய்ச் சேரும். அங்கு போய் அமைதி நிலவச் செய்தால் பிறிதொரு இடத்தில்

கூட்டம் கூடும். இப்படி ஊர் அமைதியுற வெகு நேரமாயிற்று. கொந்தளிப்பு அடங்க இரண்டு மூன்று நாளாயிற்று. கிளர்ச்சி ஒருவாறு அடக்கப்பட்டது.

124. A இராஜத்துவேஷ வழக்கு

இவ்வளவுக்கும் காரணம் சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவாவும்தான் என்பது சர்க்காரின் தீர்மானம். இவ்விருவர் பேரிலும் 108-வது பிரிவுப்படி தொடுத்திருந்த ஜாமீன் வழக்கு ரத்து செய்யப்பட்டு, 124. A பிரிவுப்படி இராஜத்துவேஷ வழக்கு தொடரப்பட்டது. இருவரும் கைது செய்யப்பட்டனர். இவ் வழக்கில் வக்கீல்களாக ஸ்ரீமான்கள் சாது கணபதி பந்துலு, கே. ஆர். வெங்கட்டராமய்யர், சோமசுந்தர பாரதி, எஸ். டி. கிருஷ்ணையங்கார், டி. ஆர். மகாதேவையர் முதலானோர் ஆஜராகி உதவி செய்தனர்.

பொது ஜனக் கட்டுப்பாடு

வழக்கு விஷயமாய் எழுதப் புகுமுன் கலகம் நடைபெற்ற காலத்தில் ஜனங்களுக்கிருந்த உத்யோக சம்பந்தமாக இண்டொரு கிருதா மீசை வைத்த திடகாத்திரங் கொண்ட ஓர் போலிஸ் சேவகன், யாராவது "வந்தே மாதரம்" என்று சொன்னால் அவர்களைப் பிடித்து சொல்லொணுத் துன்பத்திற்காளாக்குவான். சும்மா விடமாட்டான். ஜனங்கள் பொறுத்துக் கொண்டேயிருந்தார்கள். வந்தது கிளர்ச்சி. ஜனங்களிற் சிலர் அப் போலீஸ்காரனைப் பிடித்தார்கள். கழுதையின் மேல் ஏற்றி பின் கட்டாகக் கட்டினார்கள். அடர்ந்த கிருதா மீசையை இரண்டு பக்கமும் நின்றுகொண்டு பிடித்துக் கொண்டார்கள். "போடு, வந்தேமாதரம்!" என்றார்கள். அவன் "வந்தே மாதரம்" போட்டுக் கொண்டுவர, ஊர் முழுதும் சுற்றி

வந்தார்கள். இன்னொரு இடத்தில் சர்க்கார் வக்கீல் ஒருவர் க்ஷவரம் செய்துகொண்டிருந்தார். பரியாரி கத்தி தீட்டிக்கொண்டே "எஜமான்! சுதேசி, சுதேசி என்று சொல்றுங்களே, அதன் சேதி என்ன?" என்று கேட்டதற்கு, அவ் வக்கீல் "எ! சிறைக்கிறவன் – சரியாக உன் காரியத்தைப் பாரக்கிருயா, ஊர் வம்பு அளக்கிருயா?" என்று கர்வத்துடன் பதில் சொன்னர். மனதில் பெரு வர்த்தம் கொண்ட அப் பரியாரி வாய் திறக்கவில்லை. கத்தியைத் தீட்டி இரண்டு மூன்று இடங்களில் வழித்துவிட்டு, அடப்பத்தைக் கட்டிக்கொண்டு, 'சாமி! கும்பிடுரேன்!' என்று சொல்லி எழுந்ததும், வக்கீலுக்கு வருத்தமும், கோபமும் அளவுகடந்து வந்தது; இருந்தும் அடக்கிக் கொண்டு, அடே...டே! வாடா சொல்றேன்! என்று கெஞ்சிக் கூத்தாடினர். ஏனென்ருல்...நிலைமை கேவலம், பாதி க்ஷவரம் – கோர்ட்டுக்குப் போகவேண்டும்; தவிர நாவிதர்களுக்குள் கட்டுப்பாடு. ஒருவர் தொட்ட தலையை இன்னொருவர் தொடமாட்டார். கடைசியில் என்ன செய்கிறது? போலீஸுக்குச் சொல்லியனுப்பி வேறொரு ஊரிலிருந்து பரியாரியை வரவழித்து, க்ஷவரத்தைப் பூர்த்தி செய்துகொண்டார். அன்றே அன்னர் போலீஸ் காவலுடன் வேறு ஜில்லாவுக்குத் தொழிலை நடத்தப் போய்விட்டார். அக் காலம் இதுமாதிரி பல சம்பவங்கள் நடந்தன.

சாமியார்

இரு கைதிகளும் ரிமாண்டில் வைக்கப்பட்டு வழக்கு நடைபெற்றுவந்தது. அகில இந்தியாவிலிருந்தும் பல பத்திரிகை நிருபர்கள் வழக்கைக் கவனிக்க வந்திருந்தனர். மாஜிஸ்திரேட் முன்னிலையில் வழக்கு விசாரிக்கப்பட்டு செஷன்ஸுக்குக் கமிட் செய்யப்பட்டது. செஷன்ஸில் வழக்கு நடைபெற்று வந்தது. வழக்கின் சமயம் ரிமாண்டி

யிருக்கும் குற்றவாளி, எவ்வளவு நாள் வழக்கு நடந்தாலும் க்ஷவரம் செய்து கொள்ளக் கூடாது, அது ஒரு சட்டம். அது சமயம் ஒருவரைப் பார்த்தால் சந்யாஸிக் கோலம் தான். சிவமும், பிள்ளையும் அதற்குள்ளானுர்கள். ஆனல் சிறையில் ஒரு நாள் சிவம் எப்படியோ மொட்டையடித்துக் கொண்டு சாமியாராய்விட்டார். கோர்ட்டிற்கு வந்ததும் சிவத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. கோர்ட் அதிகாரிகள் கேட்கும் கேள்விகளுக்கு சாதுவைப் போல் "என்ன சொல்லறது! என்ன செய்யறது!" என்ருர். கஷ்டத்திலும் தமாஷ்தான் சிவத்திற்கு. கோர்ட் அதிகாரி இது விஷயமாக ஜயிலதிகாரியின் அஜாக்ரதைக்குக் கடித மெழுதி யனுப்பினர்.

வாக்குமூலம்

வழக்கு நடைபெற்றது; சாட்சிகள் விசாரிக்கப் பட்டன. இரு தேச பக்தர்களின் வழக்கின் முடிவை பாரத தேச முழுதுமே எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. சிதம்பரம் பிள்ளையும் சிவமும் போட்டி போட்டுக்கொண்டு அவரவர் வாக்குமூலத்தைத் தயார் செய்தார்கள். ஒரே தீவிரமாக விருந்தது. ஆஜரான வக்கீல்கள் அனைவரும் "இந்த மாதிரி வேகம் வேண்டாம். இதே தண்டிப்பதற்கு மூலகாரணமாகிவிடும். ஒருக்கால் இங்கே தண்டிக்கப்பட்டாலும், ஹைக்கோர்ட்டில் விடுதலை பெறலாம். ஆதலால், வாசகத்தில் சிறிது மாற்றிக்கொண்டால் நல்லது" என்று கேட்டுக்கொண்டார்கள்; பிள்ளை இணங்கினர். வாசகத்தில் சிறிது மாற்றியமைத்து தாக்கல் செய்தார். சிவம் 'எழுதினது எழுதினதுதான்' என்று சொல்லிவிட்டார். சிவத்தின் வாக்கு மூலம் 'பரிபூர்ண சுயேச்சையே எனது லட்சியம்' என்பது. விவரம்:

* * *

அன்னர் கோர்ட்டில் கொடுத்த ஆங்கில வாக்கு மூலத்தின் மொழிபெயர்ப்பு :—

(1) கோர்ட்டார் அன்றுதினம் கேட்டபொழுது நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை, பிரியப்படவில்லை என்று சொன்னேன். இன்று நான் சில விஷயங்கள் சொல்ல விரும்புகின்றேன்; அதைச் சொல்லுகின்றேன்.

(2) நான் ஒரு ஸந்யாசி, முக்தியடையும் வழியைப் பிரசாரம் செய்வதே எனது வேலை. அதன் தத்துவங்களை எடுத்து விளக்கி, அதை அடையும் மார்க்கத்தைப் போதிப்பதே எனது தொழில். சகல விதமான வெளி பந்தங்களினின்றும் விடுவித்துக்கொள்வதே ஆத்மாவிற்கு முக்தியாகும். அதேபோன்று ஒரு தேசத்தின் முக்தியாவது அந்நிய நாடுகளின் பிடிப்பினின்றும் விடுவித்துக்கொள்வது பரிபூர்ண சுதந்திரம் அடைவது. அதையே அந் நாட்டு மக்களுக்கும் நான் போதித்தேன். அஃதென்னவெனில், சுதந்திர லட்சியம்—அதை அடையும் மார்க்கம். பகிஷ்காரம், சுதந்திரப் பாதையில் குறுக்கே நிற்கும் எதையும் பகிஷ்கரிப்பது, சாத்வீக எதிர்ப்பு, சுதேசக் கல்வி இவைகளாகும்.

(3) சென்ற நான்கு வருடங்களாக திருவனந்தபுரம் கொச்சி சமஸ்தானங்களிலும், மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் பல இடங்களிலும் எனது கொள்கைளைப் பரப்பினேன். இவ் வருஷம் பிப்ரவரி மாதம் ஆரம்பத்தில் தூத்துக்குடி சென்று எனது நாட்டு மக்களுக்கு எனது திட்டங்களை விளக்கினேன். 1908-ம்ளு மார்ச்சு மாதம் 9, 11-உகளில் திருநெல்வேலியிலும் பேசினேன். தூத்துக்குடியிலோ, திருநெல்வேலியிலோ யாரோ என்னைப் பிரசங்கம் செய்யும்படி தூண்டினர் என்பது முழு முட்டாள்தனம்.

(4) சர்க்கார் தரப்பில் தாக்கல் செய்திருக்கும் பேச்சின் குறிப்பு என்று சொல்லப்படுவது உண்மையல்ல.

அது உண்மையும், சரியானது மல்ல; அவை திரித்தும் துண்டித்தும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் கூருத பல வாக்கியங்கள் அதில் இருக்கின்றன. என்னுடைய பிரசுரங்கள் ஐரோப்பியர்களுக்கோ அரசாங்கத்திற்கோ ராஜத் துவேஷத்தையும், கெட்ட எண்ணத்தையும், அப்ரீதியையும் உண்டாகிற்றென்பது மடமை; நோயுள்ளவனுக்குத்தான் நோயின் கொடுமை தெரியுமே தவிர, மற்றவர்களால் சிக்கின் கொடுமையை உணர்த்த முடியாது. அதேபோல் ஜனங்களிடம் அதிருப்திக்கோ மற்றவைகளுக்கோ போதுமான காரணம் இருந்தாலொழிய ஒரு மனிதனுடைய பிரசங்கத்தால் இவைகள் பரவிற்று என்று சொல்வது முட்டாள்த்தனம்.

(5) என்று தினம் ஆங்கிலேயர்கள் தேசத்தின் ஆட்சியைக் கைவசப்படுத்திக்கொண்டார்களோ அன்றுமுதலே இந்தியர்கள் அதிருப்தியும், வெறுப்பும் கொண்டனர். ஏனெனில், அவர்கள் தேசத்தை நேரடியாக ஜயிக்கவில்லை. வெகுமதியாகவும் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனல், மன்னர்களிடமிருந்து சேனைபதிகளைப் பிரித்தும், பொய்ப் பத்திரங்கள் எழுதிக்கொடுத்தும், கள்ளக் கையெழுத்திட்டும், பாமர மக்களை ஏமாற்றியும் இது போன்ற சூழ்ச்சியினலும், கொடுமையினலும் தேசத்தை வசப்படுத்திக்கொண்டார்கள். இந்த வெறுப்பு மக்களின் உள்ளத்தில் அதிகரித்துக்கொண்டே வந்து, 1857-ல் எரிமலையாக வெடித்தது. அந்த நெருக்கடியில் விக்டோரியா மகாராணி முன்வந்து 'மாக்ன சார்ட்டர்' என்ற மந்திரக்கோலால் ஜனங்களின் கண்களைத் துடைத்தார். இராஜப் பிரதிநிதிகள் ஒருவர் பின் ஒருவராக இந்தியாவுக்கு வந்து காரியத்தில் ஒன்றும் செய்யாமல் வாயளவில் திரும்பச் சொல்லிக்கொண்டே வந்தனர்.

(6) மிகக் கொடுமையான ஆயுதச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, நாட்டு மக்கள் சுதந்திரமாக ஆயுதந் தாங்கும் உரிமையைப் பரித்துக்கொண்டனர். சுதேச மக்களைக் காட்டிலும் ஐரோப்பியர்களுக்கு அதிகச் சலுகைகளைக் கொடுக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டன. வரிக் கொடுமையால் ஜனங்களின் ரத்தம் உறிஞ்சப்பட்டது. பஞ்சமும் நோயும் நாட்டிற் குடிகொண்டன. தேசமுழுதும் எதிர்த்தும் மக்களின் விருப்பத்திற்கு மாருக பிரதானமாயுள்ள மாகாணம் துண்டிக்கப்பட்டது. இதற்குப் பிரித்தாளும் சூழ்ச்சியே காரணம். தேசத்தின் திலகம் போன்ற இரு தலைவர்கள் இதுவரை சொல்லாத யாதொரு காரணமுமின்றி நாடு கடத்தப்பட்டனர். ஜனத் தலைவர்கள் பலர் சட்டத்தின் பெயரால் சிறைக்குள் தள்ளப்பட்டனர். தேசத்தில் அர்மேனியன் குதிரைப் படையால் பயங்கரமான கொள்ளைகளும், கொலைகளும் ஏற்பட்டன. விஷமத்தனமான சட்டங்களும், காரணமற்ற உத்தரவுகளும் போடப்பட்டன. குற்றவாளிகளை விசாரிப்பது கேலிக் கூத்தாகவிருந்தது.

(7) சர்க்காரின் மனிதத் தன்மையற்ற கொடூரமான இந் நடவடிக்கைகள் ஆட்சி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று ஜனங்களைத் தூண்டின. பொது மக்கள் இவ்வாறு உணர்ந்தது இயற்கையே. மகான்கள் சொல்லுவதாவது :—

"கொலை மேற் கொண்டாரிற் கொடிதே
யலைமேற் கொண்டல்லவை செய்தொழுகும் வேந்து"
"வேலொடு நின்ருனிடுவென்றது போலுங்
கோலோடு நின்ருனிரவு"

நியாயத்தை விரும்பும் பிரதி மனிதனும் கெடுதலை அறவே ஒழித்து அதன் ஸ்தானத்தில் நன்மையை நிலை

நாட்ட உழைப்பான். அதற் கிணங்க இந்தியர்கள் அரசாங்கத்தை ஒழித்து அதன் ஸ்தானத்தில் தன்னரசை நிலைநாட்ட இப்பொழுது முயற்சிக்கிறார்கள்.

தண்டனை

விசாரணை முடிந்தது. பிள்ளை அவர்களுக்கு 20 வருஷமும், சிவத்துக்கு 10 வருஷமும் கடுங்காவல் தண்டனையும் கொடுக்கப்பட்டது. வழக்கின் எதிரொலி சீமைக்கு முக்கியமாக இந்தியா மந்திரிக்கு எட்டியது; பலமாகக் கண்டிக்கப்பட்டது. அந்த நீதிபதி மாற்றப்பட்டார். ஹைகோர்ட்டாரால் இவர்கள் இருவருக்கும் 6 வருஷங்களென்று குறைக்கப்பட்டன.

சிறைவாசம்

முதலில் இருவரையும் திருச்சி சிறைக்குக் கொண்டு போனார்கள். சிறிது காலத்தில் பிள்ளையை கோயம்புத்தூர் சிறைக்கு மாற்றினார்கள். அங்கு முதலில் செக்கு இழுக்கும் வேலை உள்பட செய்து, அன்னார் கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டு சிறிது சௌக்கியமாக யிருந்து, பின் விடுதலையானார். சிவம் திருச்சி சிறையில் கம்பளி மயிர் வெட்டியும், மாவு அரைத்தும் சகிக்கொணாத் துன்பத்துக் காளானார். இக் கஷ்டமே இவரைப் பின்னால் பெரும் வியாதியாகப் பீடித்துக்கொண்டது. சிறையில் எட்டாவது பிளாக்கில் ஓர் அரசு—வேம்பு நட்டார். இப்பொழுது அரசு பெரிய விருக்ஷமாகி, பல கைதிகளுக்கு நிழல் தந்து இன்றும் அந்தப் பிளாக்கிற்கு சோபையைத் தந்துகொண்டிருக்கிறது. பின்னால், வியாதியின் காரணமாக சேலம் சிறைக்கு மாற்றப்பட்டார். 'சச்சிதானந்த சிவம்' அங்குதான் எழுதப்பட்டது. தண்டனை காலம் முடிந்ததும் வெளிவந்தார்.

ருசிகர சம்பவம்

சிறையில் ஒரு ருசிகர சம்பவம் நடைபெற்றது. கம்பளி மயிர் வெட்டுவது என்ருல் பஞ்சு வெட்டுவது போல்தான். ஆனல், வில்லில் கட்டும் நரம்புக்குப் பதில் இரும்புக் கம்பியாகவிருக்கும். பஞ்சில் வெறும் தூசிதான் உண்டாகும். கம்பளி மயிர் சுண்ணும்பில் ஊரப்போட்டு காயவைத்து வெட்ட வேண்டும். அப்பொழுது சுண்ணும்புத் தூசி உண்டாகும். சிவத்துக்கு உடம்பு ஒத்துக் கொள்ளவில்லை. இவருக்கு மஸ்துக் கட்டான தேகம். அதனல் கடின வேலை கொடுக்கப்பட்டது. சொன்னல் அதிகாரிகள் கேட்கமாட்டார்கள். ஆதலால், சிவம் ஓர் யுக்தி செய்தார்; ஓயாமல் இரும ஆரம்பித்தார். இரவு அறையில் பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. மறு நாள் ஜில்லா வைத்திய அதிகாரி (D. M. O.) சிவத்தைப் பரிசோதித்தார். நிமிஷத்துக்கு நிமிஷம், விநாடிக்கு விநாடி இருமல்; உயிர் போய் உயிர் வரும். அதிகாரி ஏதாவது கேட்டால் இரண்டு வார்த்தை சொல்வதற்குள்எட்டுத்தடவை இருமல்; பார்தார் அதிகாரி—சரி, "இவரை ஆஸ்பத்திரியில் வைத்துச் சரியானபடி கவனியுங்கள். வேளாவேளை மருந்து, ஆகாரம் கொடுங்கள். சௌக்கியமடைந்ததும் இலேசான வேலை கொடுக்கவும்" என்று சிபார்சு செய்தார். வாஸ்தவத்தில் கொஞ்சம் இருமல்தான். ஆனல், இப்படி நடந்துகொள்ளாவிட்டால் சிறையில் சாகவேண்டியதுதான். அக்காலம் சிறைக்குச் செல்பவருக்கு நரக லோகம் கிடையாது. "உண்மையைக் கண்டு தெரிந்துகொள்ள முடியாத அதிகாரிகளுக்கு சர்க்காரில் மாத மொன்றுக்கு ரூ 1500, 2000 கொடுத்துவருகிருர்களே" என்று பரிகசிப்பார் சிவா.

ஞானபாநு உதயம்

1912-ம் வருஷம் சிறையிலிருந்து வெளிவந்ததும் சிவம் தமது மனைவியுடன் சென்னையில் மைலாப்பூரில் தங்கினர்.

தான் பத்திராதிபராகவும் தனது மனைவியார் நிர்வாகி யாகவும் இருந்து 'ஞானபானு' என்ற மாதாந்தரப் பத்திரிகையை நடத்தி வந்தார். அறிவுச் சுடர் நிரம்பப் பெற்ற அப் பத்திரிகை தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பியது. மதத்தின் மூலம் அரசியலைப் புகுத்தி வேலை செய்யத் துவக்கினர். அதில், பாரதி, ஐயர் போன்ற பெரியார்கள் அரும்பெரும் விஷயங்களை எழுதிவந்தார்கள். பத்திரிகை வாலிபர்களிடையே ஓர் புதிய உணர்ச்சியை உண்டுபண்ணியது.

கொட்டாங்காச்சித் தைலம்

சிரட்டையி லிருந்து ஓர்விதத் தைலம் எடுத்தார். அது எந்தவிதமான புண்ணையும் ஆற்றிவிடும். அதிலிருந்து ஓர் பற்பொடியும் செய்தார். பத்திரிகையில் விளம்பரம் செய் யப்பட்டது. ஏராளமாக விற்பனை நடந்தது. இதுபோன்ற ஜன சமூகத்திற்கு வேண்டிய சிறு சிறு குடிசைக் கைத் தொழில்களில் சிவத்திற்கு அலாதி விருப்பம். இரண்டு வருட காலம் "ஞானபானு" நடைபெற்றது. இதற்கு செட்டிநாட்டு ஆதரவு மிகவும் அதிகம். இது சமயம் இவரது மனைவியார் நீண்டநாள் கஷ்டப்பட்டு சுகம் ஆகாமல் இம் மண்ணுலக வாழ்வை நீத்தார். சிவத்திற்கு அன்னர் பிரிந்தது ஒருவிதத்தில் வருத்தமாயினும், யாதொரு கவலையு மில்லாமல் தீவிரமாக தேசத்தொண்டியற்றலா மென்று ஆறுதல் கொண்டார்.

"பிரபஞ்ச மித்திரன்"

1916-ல் "பிரபஞ்சமித்திரன்" வாரப் பத்திரிகை ஒன்று ஆரம்பித்தார். தனது அனுபவ வேதாந்தத்தையும், 'நாரதர்' என்ற புனைப் பெயருடன் பல அரிய ஹாஸ்யக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டு வந்தார். நீடித்து

நடத்த முடியவில்லை. அவ்வமயம் தீவிரமாக தேசத்தொண்டாற்றிவந்த டாக்டர் ஸ்ரீ வரதராஜுலு நாயுடுதான் அதை நடத்துவதாகக் கேட்க அன்னாரிடம் கொடுத்துவிட்டார்.

பிரபல எழுத்தாளர்

1916 முதல் 1919 முடிய எழுத்தாளராக விருந்து காலங் கழித்து வந்தார். சிவம் முதன் முதல் சிறையில் தனது அனுபவ வேதாந்தமாகிய "சச்சிதானந்த சிவம்" என்ற புத்தகத்தை எழுதினர். வெளிவந்ததும் 'மோக்ஷ சாதன ரகசியம், ராமானுஜ விஜயம், பக்த விஜயம் போன்ற அரிய நூல்களை வெளிக் கொணர்ந்தார். முக்கியமாக ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சரித்திரம், உபதேசங்கள், ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் சரித்திரம், உபதேசங்கள் ஆகிய இரு மகான்களின் நூல்களை யெல்லாம் சுவை குறையாது மொழிபெயர்த்து பல புத்தகங்களாக வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. நெட்டாஜி, வீரரத்ன பாஜிப் பிரபு முதலிய சரித்திரக் கதைகளும், சிவாஜி, தேசிங் போன்ற நாடகங்களும்; நளின சுந்தரி அல்லது நாகரீக தடபுடல் என்ற நவீனமும் எழுதி உதவி யிருப்பது கவனிக்கத் தக்கது. சுமார் 30 புத்தகங்களுக்கு மேலாகவே எழுதியுள்ளார்.

"இந்திய தேசாந்திரி"

1919-ல் "இந்திய தேசாந்திரி" என்ற பெயருடன் ஓர் வாரப்பத்திரிகை துவக்கினர். சிறிது நாட்கள் நடப்பதற்குக்கூட சர்க்கார் விட்டுவைக்கவில்லை. பணக் கஷ்டம் வேறு. சீக்கிரத்திலேயே நின்றுவிட்டது.

திருவானைக்காவல் விஜயம்

திருவானைக்காவல் காவலில் சிவம் சிறிதுநாள் தங்கி ஓர் குஸ்திப் பள்ளிக்கூடமும், அரசியல் வகுப்பும் நடத்தினர். காலேஜ் மாணவர்களையும் இதர வாலிபர்களையும்

சேர்த்து நாட்டிற்குப் பயனுறும் வழியில் அவர்களைப் பயிற்றுவித்தார்.

திலகர் கட்டம்

சிவன், தான் இருக்கும் இடத்தில் திலகர் பிறந்த தினத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாடுவார். அன்று ஏழைகளுக்கு அன்னமளிக்கப்படும். பொதுக் கூட்டம் நடத்தி திலகபிரானின் தியாகத்தையும், உபதேசங்களையும் எடுத்துச் சொல்வார். 1908-ல் நடைபெற்ற பாலர் பிரசங்கத்திற்குப் பின் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்கு 'திலகர் கட்டம்' என்று பெயரிட்டுக் கூட்டம் நடத்தியவர் சிவமே.

நோய்வாய்ப்படல்

1919-ல் தீவிர உழைப்பினல் நோய் வாய்ப்பட்டார். அப்பொழுது திருவல்லிக்கேணியில் வசித்து வந்தார். இவரைத் தனது சகோதரரைப் போன்று தன் கையிலிருந்தே பணம் செலவழித்து சிகிச்சை செய்து சொஸ்தப் படுத்தியவர் டாக்டர் ஸ்ரீ நஞ்சுண்டராவ். உத்தம தேசாபிமானி, தீவிரவாதி. சிவத்தினிடம் பிரத்யேகப் பிரியம் அன்னருக்குண்டு. சிவமும் அப்பெரியாரிடம் அளவு கடந்த தேவதா விசுவாசம் காட்டிவந்தார். மத அரசியல் விஷயங்களில் இருவரும் ஒரே நோக்கங் கொண்டவர்கள். சுவாமி விவேகானந்தர், மஹரிஷி திலகர் இரு மஹான்களிடமும் இவ்விருவருக்கும் அளவு கடந்த பக்தியுண்டு. டாக்டர் ராவ், சிவத்தை "சிவாஜி" என்றே அழைப்பார்.

படுக்கையிலும் தேசாவேசம்

அப்பொழுது நாட்டில், ரௌலட் சட்டம் சத்தியாக்கிரக எழுச்சி, ஜாலியன் வாலா படுகொலை, மாண்ட் போர்ட் சீர்திருத்தம், அமிர்தசரஸ் காங்கிரஸ் ஒன்றன்பின்

ஒன்ருக நடந்தது. திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஓர் மாபெருங் கூட்டம். பஞ்சாப் படுகொலை சமயம் வைசிராயாயிருந்த சேம்ஸ்போர்டை திரும்பி அழைக்க வேண்டுமென்ற தீர்மானம். இதைக் கேள்வியுற்ருர் படுத்த படுக்கையி லிருந்த சிவா. எப்படியோ கடற்கரைபோய் கூட்டத்தில் கலந்து கொண்டார். வீறுகொண்டு எழுந்து தள்ளாடிக்கொண்டே நின்ருர். தீர்மானத்தை ஆமோதித்துப் பேசித் திரும்பினர்.

டிராம்வே வேலை நிறுத்தம்

1920-ல் நடைபெற்ற டிராம்வே தொழிலாளர் வேலை நிறுத்த சமயம், சிவம் இரவு பகல் ஓயாமல் பங்கெடுத்து வேலை செய்தது குறிப்பிடத் தக்கது. இதர தொழிலாளர் கூட்டங்களிலும் கலந்துகொள்ளத் தவற மாட்டார். தொழிலாளர் போன்ற ஏழை மக்களுக்கு உழைப்பதை ஓர் உத்ஸாகமாகக் கொள்வார்.

மதுரை ஹார்வி மில் வேலை நிறுத்தம்

1920-ல் மதுரையில் நடைபெற்ற தொழிலாளர் வேலை நிறுத்த சமயம். ஸ்ரீ ஜார்ஜ் ஜோஸப் முதலானோர் வேண்டுகோட் கிணங்கி, சிவம் மதுரை வந்து சில நாட்கள் தங்கி, அரும் பெரும் தொண்டாற்றினர். அவ்வமயம் இரண்டாம் தடவையாக தூத்துக்குடி சென்று ஓர் உணர்ச்சி ததும்பும் பிரசங்கம் புரிந்து திரும்பினர்.

ஒத்துழையாமை இயக்கம்

சிவத்துக்கு மகாத்மா காந்தியின் அஹிம்சையில் நம்பிக்கை யில்லாம லிருந்தும், போராட்ட சக்தி நிரம்பிய ஒத்துழையாமை இயக்கத்திற்கு வேண்டிய அளவு உதவி புரிந்து வந்தது குறிப்பிடத் தக்கது. சாத்தூர் அரசியல் மகாநாடு, ஆம்பூர் கிலாபத் மகாநாடு, விழுப்புரம் அரசியல்

மகாநாடு இவைகளில் இவர் நிகழ்த்திய, பிரசங்கங்கள் குறிப்பிடத் தக்கன. 1920-ம் வருஷம் கல்கத்தாவில் ஸ்ரீ லாலா லஜபதிராயின் தலைமையின் கீழ் "ஒத்துழையாமை இயக்கம்" சம்பந்தமாக நடைபெற்ற விசேஷ காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதிநிதியாகப் போய் ஸ்ரீ விபின சந்திரபாலர் தீர்மானத்திற்கு ஆதரவாக நின்முர். திரும்பியதும் சென்னையில் "சுயராஜ்ய சங்கம்" என்று ஓர் ஸ்தாபனம் ஏற்படுத்தி நண்பர்களுடன் வேலைசெய்து வந்தார்.

சங்கல்பம், காஷாய உடை

1921-ம் வருஷம் தை மாதப் பிறப்பன்று, சிவம் ஸ்நானம் செய்து காஷாய உடை தரித்து, ஓர் அறையில் தனது இஷ்ட தெய்வமாகிய மஹாசக்தியையும், தன்னையாட்கொண்ட குருநாதரையும் நினைத்து தியானத்திலாழ்ந்தார். ஒரு முகூர்த்தகாலம், ஆத்மீக உணர்ச்சியே கைக்கொண்ட பாரத மக்களிடம் தேசியத்தை மதமாக்கி, பாரதநாட்டில் பிறந்தவர்களனைவரும் பாரதஜாதி யென்றும், அவர்கள் வழிபடும் தெய்வம், ஸ்ரீ பாரததேவி யென்றும், ஆகையால் அனைவரும் ஸ்ரீ பாரதிய மதத்தைச் சார்ந்தவரென்றும், ஸ்ரீ பாரதாஸ்ரமம் என்று ஒரு ஸ்தாபனம் கண்டு, அதில் இளம் வாலிபர்களைச் சேர்த்து, அதன் மூலம் இக்கொள்கையை தேசமுழுதும் பரப்ப வேண்டுமென்றும், தான் வருங்காலம் செய்யப்போகும் காரியத்திற்கு சங்கல்பம் செய்துகொண்டார். தனக்கு "ஸ்வந்திரானந்தர்" என்று பெயர் தரித்துக்கொண்டா ராயினும், பழைய 'சுப்பிரமணிய சிவம்' என்ற பெயரை விட்டுவிட மனமில்லாதவரா யிருந்தார்.

மகாமகம் 1921

ஸ்ரீ பாரதாஸ்ரமத்திற்கு வாலிபர்களையும் பணத்தையும் திரட்ட முதன் முதல் கும்பகோணம் சென்முர். மகாமக

சமயம். பல ஊர்களி லிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். கும்பபேஸ்வர ஸ்வாமி கோயிலில் தினந் தோறும் மாலை வேளைகளில் சிவம் தேசவெறி பிடிக்கும் மத சம்பந்தமான பிரசங்கங்கள் செய்தார். அனேக இடங் களிலிருந்து வந்த இச்சா சேவகர்களும் கூட்டத்தில் வந்து விஷயத்தைக் கவனித்தார்கள். உணர்ச்சி கொண்டார்கள். அதில் 4. 5 பேர்கள் எழுந்திருந்து, "மாதாவின் பலி பீடத் தில் தியாகம் செய்ய நாங்கள் தயார்" என்று முன்வந் தார்கள். அவ்வமயம் சுமார் ரூ. 500 வரை அவர்கள் மூலம் வசூலிக்கப் பெற்றது. மகாமகம் முடிந்ததும் சிவம் வாலிபர்களை அழைத்துக்கொண்டு பண சகிதம் சென்னை வந்து சேர்ந்தார். முதன் முதல் சென்னையை யடுத்த கோடம்பாக்கத்தில் ஸ்ரீ பாரதமாதா கோயிலுக்கும் ஸ்ரீ பாரதாஸ்ரமத்திற்கும் இடம் பார்த்தார்.

ஸ்ரீ பாரதீய மதம்

சிவம் பத்திரிகையில் ஓர் சமயம் எழுனது: ஆ! ஆ!! என்ன பிரபஞ்சம்! என்ன அழகு! என்ன லாவண்யம்! எங்கு பார்த்தாலும் பரந்து விரிந்து கண்ணுக் கெட்டாது கருத்துக்கும் எட்டாது கிடக்கின்ற பிரபஞ்சம், இங்குள்ள வேற்றுமையின் அழகே அழகு! வித்யாசத்தின் லாவண் யமே லாவண்யம்! ஒற்றுமை என்பது உள்ளடங்கி யிருந் தாலும் அதைப் பொய்ப்படுத்தி வேற்றுமை என்பதுதான் வெளிக் கிளம்பிப் பிரகாசிக்கிறது...........................

இந்தப் பிரபஞ்சத்திலேயே சிருஷ்டிக்கப்பட்டுள்ள சமஸ்த கோடி ஜீவராசிகளும் ஆச்சரியமான வேற்றுமை யில் அமிழ்ந்து கிடக்கின்றன. மனுஷ்ய வர்க்கத்தினுள்ளே ஒருவர் முகத்தைப் போல் இன்னொருவர் முகம் இல்லை. ஒருவர் குரவளம் போல் இன்னொருவர் குரவளம் இல்லை. ஒருவர் நடையைப் போல் இன்னொருவர் நடையில்லை.

மனுஷ்யர்க ளெல்லோரும் ஒரேவிதமான ஞானேந்திரியங்கள் பெற்றிருந்தாலும் அவ்விந்திரியங்களின் போக்குகளும் தன்மைகளும் வெவ்வேருகத்தான் இருக்கின்றன. உலகுக்கு ஆதாரமா யுள்ளது வேற்றுமையே. எப்பொழுது இரண்டு என்று ஏற்பட்டுவிட்டதோ அப்பொழுதே அதனுடனேயே வேற்றுமையும் ஏற்படும் என்பது நிச்சயம்..........................

எல்லாவற்றிற்கும் காரணம் மனந்தா னென்று சகல வேத சாஸ்திரங்களும் சான்ருேர்களும் கூறுவதற்கொப்ப அனுபவமும் சரியா யிருக்கின்றது.

"மனவா வனுஷ்யாணும் காரணம் பந்த மோக்ஷயோ"

பந்தத்துக்கும் மோக்ஷத்துக்கும் காரணம் மனம்தான் என்று உபநிஷத்துகள் பறையறைகின்றன..................

மனுஷ்யன் சரணைகதி அவயவங்களோடு கூடிய இந்த சரீரத்தை நான் என்று அபிமானித்து அந்தச் சரீரத்திற்கு வேண்டிய சகல அனுகூலங்களை அடைவதற்கு முயற்சிக்கும் வரையில் அவனுக்கு துக்க நிவர்த்தி ஒருநாளும் உண்டாகாது. சரீரத்தினிடத்தில் அபிமானமுள்ள வரையில் உலகத்திலே யுள்ள சகல வஸ்துக்களிடத்தும் அபிமான மேற்படத்தான் செய்யும். இந்த அபிமான மெல்லாம் நீங்க வேண்டுமானல் மனிதன் சர்வசங்க பரித்தியாக புருஷனய் எல்லாவற்றையும் உதறிவிட்டு ஏகமாய் இன்பப் பொருளா யென்றுமுள்ளதாயுள்ள சத்திய வஸ்துவே தான் ஆதல் வேண்டும்.

ஆகையால் துக்க நிவர்த்தியும் ஆனந்தப் பிராப்தியும் அடைய வேண்டுமானல், பந்த நிவர்த்தியும் மோக்ஷப் பிராப்தியும் அடைய வேண்டுமென்பது நிச்சயமானது. வியஷ்டியாகிற தனி மனிதனுக்கு எந்த விதிகள் பொருந்

துமோ அதே விதிகள் ஸமஷ்டியாகிற ஜனசமூகத்துக்குப் பொருந்து மென்பதுதான் சிருஷ்டி நியதி. ஆகையால் ஜனசமூகமானது சுகமாக வாழவேண்டுமென்ருல், சுத்த மாக இருக்க வேண்டுமென்ருல் பந்த நிவர்த்தியையும் மோக்ஷப் பிராப்தியையும் அடைய வேண்டும். பந்த நிவர்த்தி யடையாத எந்த ஜனசமூகமும் மோக்ஷப்பிராப்தி அடையாது. பந்த நிவர்த்தி அடையாத ஜனசமூகத்திலுள்ள அந்த மனிதனும் தான் அந்த ஜனசமூகத்தின் ஒரு உறுப்பா யிருத்தலினுலே சுக வாழ்க்கை வாழ முடியாது. பந்த நிவர்த்தி யடையாத ஜனசமூகம் துக்கத்திலும் துன்பத்திலும் ஆழ்ந்து அன்புகெட்டு அறிவு குழம்பி ஆண்மை யிழந்து, ஹிம்சிக்க விரும்புகின்ற எந்த அன்னிய சமூகத்துக்கும் அடிமையாய்க் கிடக்கத்தான் அருகதையுள்ளதாகிவிடும். ஆகையால் ஜனசமூகத்தின் பந்த நிவர்த்தியே அந்த ஜனசமூகத்தி லடங்கியுள்ள தனி மனிதனின் சுகமாகவும், சுலபமாகவும் பந்த நிவர்த்தி யடை வதற்கு, அதனுல் துக்க நிவர்த்தி யடைவதற்கு, மோக்ஷ மடைவதற்கு முக்கிய காரணமா யிருக்கிறது. ஆகையால் பந்தத்தினுள்ளே கட்டுப்பட்டு சோர்வுற்றுக் கீழே விழுந்து கிடக்கும் ஜனசமூகமானது ஒரு நிமிஷமும் தாமதிக்காது. உடனே பந்த நிவர்த்தி அடைய முயற்சிக்க வேண்டியது அத்யாவஸ்யமாம்.

அப்படி விழுந்து கிடக்கும் ஜன சமூகங்களுக்குள்ளே நம்முடைய பாரத தேசமும் ஒன்று. ஆனுல், மிக மிக முக்கியமானதொன்று என்பது உலகமறிந்த விஷயம். இந்த பாரத தேசமானது பந்த நிவர்த்தி யடைந்து சர்வ சுதந்திர சுகபோக்கியங்களுடனே வாழ்வதற்கு இதுகாறும் உலகத்திலே தோன்றியுள்ள மகாசாரியார்களுடைய உப தேசங்களை ஒருங்கு திரட்டி ஒரு உருக் கொடுத்து அவ் வுருவையே அனைவரும் அவலம்பித்து ஆனந்தத்தை யடைய

வேண்டுமென்பது எனது நெடு நாளைய எண்ணமாயிருந் தது. அவ்வெண்ணம் காரியத்திலே கைகூடும் காலம் இப்பொழுது வந்து விட்டது என்று நான் காண்கிறேன். அந்த நூதன உருவாயமையும் கொள்கைகளை ஸ்ரீ பாரதீய மதம் என்ற பெயருடனே வெளியிட்டு இந்த ஆர்ய தேசத் தாரனைவரையும் உண்மையான பாரத புத்திரர்களாக்கி அவர்கள் என்று மழியாத இன்பமும் சுதந்திரமும் அடையு மாறு நான் என்னுலான முயற்சியைச் செய்வதற்கு இரவும் பகலும் நான் இறைஞ்சி நிற்கும் என் இறைவியாம் ஸ்ரீ பாரத மாதா அருள் புரிக.

ஸ்ரீ பாரத மாதா கோயில்

அகண்ட சச்சிதானந்த சொரூபிணியாம் மகா சக்தியை அண்ட பிண்ட சராசரங்க ளனைத்தையும் பம்பரம் போலாட்டி அனந்த கோடி லீலைகள் புரிந்து அவரவர் களுடைய முயற்சிக்குத் தக்கவாறு ஐசுவரியமும் ஆனந்த மும் அளித்துக் காத்து வருகின்ற பராசக்தியை, அரக்கர் வலிமையை அழித்து அமர வாழ்வை யளிக்கவல்ல மகிஷாசுர வர்த்தனியாம் மகா காளியை, ஸ்ரீ பாரதமாதா ரூபமாக இந்தியா தேசத்திலுள்ள எல்லோரும் ஏக மன துடனே தியானத்திலே நாம் இப்பொழுது வீழ்ந்து கிடக்கும் இந்தப் படுபாதாள நிலைமையினின்றும் மேலேறி மோக்ஷ சுகம் பெறுவதற்குப் பிரதான மார்க்கமென நான் கருதி அன்னைக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டுமென நெடு நாட்களாக முயற்சித்து வந்தேன்.

பழம் பெரும் நாடாம் பாரத நாட்டினுடைய பெருமையை, தங்களுடைய புத்தி சக்தியினுலும், தியாக தீரத்துவத்தினுலும், வீரச் செயல்களினுலும் எவரெவர்கள் பிரகாசிக்கச் செய்துள்ளவர்களோ, அவர்கள் எல்லோ ருடைய விக்கிரகங்களை இவ்வாலயத்தில் சுற்றுப்புற

தேவதைகளாக வைத்து பொது ஜனங்களுக்கு தேச பக்தியை உண்டு பண்ணலாமென்று கருதியிருக்கிறேன்.

இன்னும் இந்த க்ஷேத்திரத்தில் மூலஸ்தானத்தினுள் இந்தியாவில் பிறக்கும்படியான பாக்கியம் பெற்ற ஜனங்களில், சொரூப பக்தியினிடத்தில் நம்பிக்கையுள்ள சகலரும் ஜாதிமத பேதமில்லாமல் காசி, பண்டரீபுரம் முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று அவரவர்கள் தங்கள் சொந்த சம்பிரதாயங்களை அனுசரித்து தாங்களே பூஜை முதலியன செய்து கொள்ளலாம்.

இம்மாதிரியான திவ்ய க்ஷேத்திரம் ஒன்றையும், அதனுடன்கூட நமது முன்னோர்களின் பரிசுத்த வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புவர்களின் நன்மையின் பொருட்டு "ஸ்ரீ பாரத மாதாஸ்ரமம்" என்ற பெயருடன் ஓர் ஆஸ்ரமமும் கட்டக் கருதியிருக்கிறேன். அதில் சேரும் வாலிபர்களைச் சாதுக்களாகவும், சற்குண சீலர்களாகவும், சுதந்திர வீரர்களாகளாகவும் ஆக்கக் கருதியுள்ளேன்.

தேச சஞ்சாரம்

அம்முயற்சியிலே பணத்தை விரயம் செய்து கொண்டிருந்த சமயத்தில், செட்டி நாட்டிலேயுள்ள சிறுவயல் என்னும் ஊரிலிருந்து ஒரு அழைப்புக் கடிதம் வந்தது. அங்கு சென்று, எல்லோரும் பிரமிக்கும்படியாக ஒரு பிரசங்கம் செய்து விட்டு, அங்கிருந்து காரைக்குடிக்கு ஆயிரக் கணக்கான ஜனங்களின் முன்னிலையில் இரண்டு நாட்கள் பிரசங்கம் செய்தார். செட்டிமார் நாட்டு ஜனங்களுக்கு இவரிடத்து ஒரு பிரேமை விழுந்து விட்டது. இவர் அந்த நாட்டுக்கே வந்து விடும்படிக்கும், இவருக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பதாகவும் சில நண்பர்கள் கூற, இவரும் சந்தோஷத்துடன் ஒப்புக் கொண்டார். பின்னர் புதுக்கோட்டைக்கு வந்து நகர்

மண்டபத்திலே அந்த சமஸ்தானத்து ராஜாவினுடைய செயல்களை பலமாகக் கண்டித்தது அந்நகர் வாசிகளுக்கு பீரங்கியிட்டு எழுப்பி விட்டது போன்ருயிற்று. சமஸ்தான சர்க்கார் இவர் பேரில் தடை உத்தரவு விதித்தனர்.

மறுபடியும் சென்னைக்கு வந்து, சாமான்களெல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு திரும்பவும் சிறுவயலுக்கே சென்ருர்; அங்கே இவருடைய பழைய குருநாதரான சதானந்த சுவாமிகள் தேவகோட்டையில் வந்திருந்ததாகக் கேள்விப்பட்டு உடனே சென்று அவரைக் கண்டு, இரவெல்லாம் சம்பாஷணை செய்து கொண்டிருந்தார். காரைக்குடியையே தமது வாசஸ்தலமாகக் கொண்டு, அங்கே வாலிபர்களைச் சேர்த்து, ஸ்ரீ பாரதாஸ்ரமம் என்று ஒரு ஆஸ்ரமம் ஏற்படுத்தி, நன்ருய் உறங்குவதற்கும் உண்ணுவதற்கும் கூட நேரமில்லாமல், தாம் அவலம்பித்த பாரதிய மதக் கொள்கைகளை பரப்புவதிலேயே கருத்தா யிருந்தார். அரியக்குடி, அமராவதி புதூர், புதுவயல், கோட்டையூர், தேவகோட்டை, பள்ளத்தூர், திருப்புத்தூர், மேலூர், மதுரை முதலான இடங்களுக்குச் சென்று தமது மதத்தையும் தேச பக்தியையும் பலமாக ஊட்டி பொது ஜனங்களுக்கு உணர்ச்சியை உண்டு பண்ணினர். சில வாலிபர்களைக் கொண்டு தேசிங்கு நாடகம் காரைக்குடியில் நடத்தினர். பின்னர் தஞ்சாவூரிலே நடந்த தமிழ் மாகாண மகாநாட்டுக்குத் தமது ஆஸ்ரமப் பிள்ளைகளுடனே போய் பிரசங்கங்கள் புரிந்து எழுச்சியை உண்டு பண்ணினர்; பட்டுக்கோட்டை திருச்சினுப்பள்ளி முதலிய இடங்களிலும் பிரசங்கங்கள் நடந்தன.

காரைக்குடியிலே மகாத்மா காந்தி வந்தபொழுது, அவரை வரவேற்பதற்கு எவரும் முன்வராமையால், சிவம் அந்தப் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொண்டு, வீடுவீடாகச் சென்று பண வசூல் செய்து மகாத்மா காந்தியை ராஜோப

சாரத்துடன் வரவேற்றூர். அமராவதிபுதூரில் ஸ்ரீ பாரத தேவிக்கு ஆலயம் கட்டுவதற்கு மகாத்மா காந்தியால் அஸ்திவாரக்கல் நாட்ட ஏற்பாடு செய்து, சர்க்காரால் தடை செய்யப்பட்டது. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திருக்கோஷ்டியூர், சிவகங்கை, மானுமதுரை வழியாக இராமேஸ்வரம் சென்று சேது ஸ்நானம் செய்துவிட்டு, மானுமதுரைக்குப் பக்கத்திலேயுள்ள பசுளை யென்ற கிராமத்தில் பிர்ம ஸ்ரீ கிருஷ்ணையர் என்னும் ஒரு நண்பரால் ஸ்ரீ பாரதமாதா கோயில் கட்டுவதற்காகவும், ஸ்ரீ பாரதாஸ்ரமத்தின் உபயோகத்துக்காகவும் ஒரு ஏகரா நிலம் அந்த கிராம ஜனங்களின் முன்னிலையில் வேத பாராயண கோஷத்துடன் வைதீக முறைப்படி தம்பதி சகிதமாக தாரை வார்த்துத் தானம் செய்து கொடுக்கப்பட்டதைப் பெற்றுக் கொண்டு, பரமக்குடி, இளையான்குடி, அபிராமம் சாத்தூர், திருமங்கலம் முதலிய இடங்களில் பிரசங்க யாத்திரை புரிந்துவிட்டு, இந்தியா முழுதும் ஒரு சுற்று யாத்திரை போகக் கருதி தம்முடன் வசித்துவந்த பிள்ளைகளை மதுரையிலே நிறுத்திவிட்டு, தாம் மாத்திரம் ஒரு காரியமாக காரைக்குடிக்கு வந்து சேர்ந்தார்.

இரண்டாம் முறை சிறைவாசம்

அப்பொழுது, 1921-ம் வருஷம் அக்டோபர் மாதம் 28-ம் தேதி வெள்ளிக்கிழமை பகல் 3 மணிக்கு இவர் தமது ஆஸ்ரமத்தில் தனித்திருக்கையில், அரசாங்கத்தாரால் இடப்பட்ட ஒரு பிடியுத்தரவின் மேல் கைதி செய்யப்பட்டு, மதுரை ஜில்லா நியாயாதிபதியின் முன்பாக ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இந்த வழக்கிலே இவருக்கு இரண்டு வருஷம் கடுங்காவலும் 500 ரூ. அபராதமும், அபராதம் கட்டாவிட்டால் அதற்கு ஆறு மாதம் கடுங்காவலும் ஆக மொத்தம் இரண்டரை வருஷம்

கடுங்காவல் விதிக்கப்பட்டது. இந்த சமயத்தில் இவர் நீதி ஸ்தலத்திலே கொடுத்த வாக்குமூலத்தை அப்படியே இங்கு எழுதுவது பொருத்த முடையதாகும். சிவம் ஆங்கிலத்தில் எழுதிக்கொடுத்த வாக்குமூலத்தின் மொழிபெயர்ப்பு பின் வருமாறு:

(1) நான் ஒரு சங்யாசி. எத்தகைய பலன் நேரிடுமோ என்று கவலைப்படாமல் சத்தியத்தைப் பிரசாரம் செய்வதே எனது தர்மம்; "பயமில்லாமல் – வியாபார தோரணையில்லாமல், நண்பர் அல்லது பகைஞன் என்று பாராட்டாமல் ஏ, சங்யாசி, நீ சத்தியத்தைப் பற்றிநில்; இந்த நிமிஷம் முதல் இவ்வுலகையும் அடுத்த உலகையும் இனிமேல் வருபனவற்றையும்அவற்றின் போகங்களையும் அவற்றின் வீணத்தனங்களையும் தியஜித்து விடு: ஏ, சத்தியமே, நீயே எனக்கு வழிகாட்டியா யிரு" வேதங்கள் எனக்கு இவ்வாறு சொல்லுகின்றன. ஆகையால், நான் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்ற பிரசங்கத்தி லடங்கியவை, சரித்திர விஷயங்களையும் உண்மைகளையும் வெறுமே எடுத்துரைத்ததைத் தவிர, வேறொன்றுமில்லையென்று நான் கூறுகிறேன். இன்னும் நான் சந்நியாசியாகையினலே, முக்தியே–எல்லா பந்தங்களி னின்றும், விடுதலையே — தனிப்பட்ட மனிதர்களுக்கும் ஜன சமூகங்களுக்கும் லட்சியமாமென்றும் இஷ்டப்படி நினைக்கவும், செய்யவும் ஸ்வதந்திரமிருந்தாலே நல் வாழ்க்கை வாழ முடியுமென்றும், இது இல்லாவிடில் தனிப்பட்ட மனிதன் அல்லது ஜனசமூகம் வீழ்ச்சி யடையத்தான் வேண்டு மென்றும் நான் வற்புறுத்துகிறேன். எப்பொழுது எங்கே ஸ்வதந்திரம் நசுக்கப்படுகிறதோ அல்லது நசுக்கப்பட முயற்சிக்கப்படுகிறதோ அப்பொழுது அங்கே என்னல் முடிந்த வன்மையுடன் எனது கண்டன சப்தத்தைக் கிளப்புவது மாத்திரமன்று; எப்பொழுதும் போல என்ன சிரமப்பட்டும்

ஸ்வதந்திரம் பிரகாசிக்கச் செய்வதற்கு என்னால் முடிந்த வரையில் வேலை செய்வதும் எனது தர்மமாகும்; இன்னும் உலகிலே அடிமைப்பட்டுக் கிடக்கும் எல்லா ஜனசமூகங்களினுடைய ஸ்வதந்திர நியாயத்தையெடுத்து வாதிப்பதும் எனது தர்மமாகும்! எனது இந்திய ஜன சமூகத்தின் ஸ்வதந்திர நியாயத்தையெடுத்து வாதிப்பது இன்னும் பெரிய தர்மமாகும்; ஏனென்றால், எனது ஜன சமூகத்தை ஸ்வதந்திரமுடையதாகச் செய்ய முயற்சிக்காமல், இதர ஜனசமூகங்களின் ஸ்வதந்திரத்துக்காக நான் உரத்துப் பேசினால், உலகத்தாரின் பார்வையிலே அது பரிகாசமாகவே முடியும்.

(2) எனது மதம் ஸ்ரீ பாரதீயம் என்பதாம்; இது அத்வைத சாஸ்திரத்தினுடைய சகுண பக்ஷமேயொழிய வேறில்லை. இது ஒன்றே மனிதனுக்கு பரிபூர்ணமாக தன்னுடைமையை அளித்து, சார்பு எல்லாவற்றையும் அதனுடன் சம்பந்தப்பட்ட அடிமைத்தனமான பாவனைகளையும் நீக்கிவிட்டு, இவ்விதமாக மனிதர்கள் நியாயமானதைச் செய்யத் துணிந்து, அவசியம் நேரிட்டால் எவ்வித முணுமுணுப்புமில்லாமல் அதற்காகக் கஷ்டப்படுதற்குத் தயாராகி கடைசியில் பரிபூர்ண ஸ்வதந்திரம் அடையும்படி செய்ய வல்லது. இந்த மதத்திற்கு அக்கிர தேவதை இந்தியத் தாயாகிய ஸ்ரீ பாரதமாதாவாகும்; இந்த சகுண ஈஸ்வரத்வம் காஸ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள பூமியையும் அதனுள்ளிருக்கும் சமஸ்த சிருஷ்டிகளையும் வியாபித்துள்ளது. இந்த தேவதையை இடைவிடாது தியானம் செய்தால் அது தியான கர்த்தாவை அந்த தேவதையிலேயே லயமடையும்படி செய்துவிடும். அதாவது வியஷ்டி ஜனசமூக சமஷ்டியிலே லயமடைந்துவிடும். இவ்விதமாக மனிதன் ஜனசமூக முழுவதினுடையவும் ஒன்று சேர்ந்த பலம், அறிவு, சக்தி, ஊக்கம் இவற்றை அடை-

கிறான். இந்திய பூமியாம் பரிசுத்த தேசத்தின் எல்லையி னுள்ளே பிறக்கும்படியான பாக்கியம பெற்ற எல்லோ ருக்கும் இந்தியாவிடத்து அத்யந்த அன்பும் மதிப்பும் வைத்து பைத்தியம் பிடித்தவர்கள் போல, இந்தியா அதன் எல்லா பந்தங்களினின்றும் உடனே விடுதலையடைய வேண்டுமென்று அதற்காக வேலை செய்யப் புறப்பட்டிருக் ருக்கிறவர்கள் எல்லோருக்கும் ஜாதி, கொள்கை, மதம் ஆகிய எவ்வித பேதமுமில்லாமல் ஸ்ரீ பாரததேவியை உபா சிப்பதற்குச் சமத்துவமான உரிமைகளும், பாத்யதை களும் உண்டு. உபாசனை, பந்தி போஜனம், கலப்பு விவாக இவற்றைப் பற்றியுள்ள மத, சமூக விஷயங்களில் இந்த மதமானது அகன்ற தாராள நோக்கமுடையதாயிருந் தாலும், தீண்டாமையை வெறுக்கத்தக்க ஒரு பாபமாக வும் இந்திய ஜன சமூகத்துக்கே ஒரு களங்கமாகவும் இந்த மதம் கருதுகிறது. எவ்வித லாகிரி தரக்கூடிய பானங்களையும், அல்லது மருந்துகளையும் உபயோகிக்கக் கூடாதென்று இந்த மதம் வற்புறுத்துகின்றது. இந்த மதம் உடன்பாடானது; கட்டும் தன்மையது. உலகிலே யுள்ள எவர்மீதும் பகைமையையோ, குரோதத்தையோ அல்லது தீய எண்ணத்தை யோபோதிக்கிறதில்லை. சத்தியம் பயமற்ற தன்மை, சகன சக்தியை விருத்திசெய்து கொள் ளுதல் இவை இந்த மதத்திற்கு ஆதாரக் கொள்கைக ளாகும். இந்தியா புனருத்தாரணம் பெற்று ஸ்வதந் திரமும், திருப்தியும் சுகமும் அடைந்தாலொழிய உலக முழுதுமே ஸ்வதந்திரத்துடனும், சுகமாயும் இருக்கமுடி யாது என்பது எனது உறுதியான திட நிச்சயம். ஏனெ னில், உலகத்தின் நினைப்புக்களிலும், வேலைப்பாடுகளிலும் சிறந்தனவும் உயர்ந்தனவுமாயுள்ள எல்லாவற்றிற்கும் இதுவே தாய் பூமி; சரித்திரம் எழுதப்படாத அந்நாட் களிலேயே அது ஒப்புவமையற்றதொரு நாகரீகத்தை

யும், வித்தையையும் உடைத்தாயிருந்தது. ஆதலால் தான் எல்லா தேசங்களிலும் மிகமிக சிரேஷ்டமான தேசம் இந்தியாவே யென்று நான் கருதுகிறேன். அதனு லேயே எல்லா தேவதைகளிலும் மிகமிகச் சிரேஷ்டமான தேவதையாக எனது தாய்நாட்டை உபாசிக்கிறேன். நான் இந்த எண்ணங்களையும் மற்ற எண்ணங்களையும் ஒழுங்கு படுத்திஇந்த மதத்தினுடைய கோட்பாடுகளாக அவற்றிற்கு உருக் கொடுக்கு முன் நான் கைதி செய்யப்பட்டேன். சந்தர்ப்பம் நேரிடுகிறபொழுது இந்த வேலையின் மிகுதி யைச் செய்யலாமென்று நம்பியிருக்கிறேன்.

(3) ஆகையால், மதத்தினுலும் ஆஸ்ரமத்தினுலும் ஆக்ஞையிடப்பட்டவனுய், சத்தியத்தின் பொருட்டும் எனது தாய் நாட்டின் பொருட்டும் இந்த பயமற்ற பிரசாரக வேலையில் நான் பிரவேசித்தேன்.

(4) பிராதுக்குக் காரணமாயுள்ள பிரசங்க விஷயத்தில் நான் அதிலேயுள்ள ஒரு வார்த்தையைக்கூட மறுக்கவில்லை. குறிப் பெடுப்பவர் குறிப்பெடுக்கும் அவ சரத்திலே சில வார்த்தைகள் விட்டுப்போயிருக்கின்றன வென்பதைத் தவிர நான் பேசினது அப்படியே ஆஜர்ப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

(5) நான் உண்மையையே முழு உண்மையையே பேசியிருக்கிறே னுதலால், மனுஷ்ய வர்க்கத்தின் முன்னே நின்றுகொண்டு தெளிந்த ஸ்வதந்திர மான மனச் சாட்சி யுடனே நான் குற்றவாளி யல்லன் என்று கூறத் துணிகிறேன்.

(6) இந்த எனது வாக்குமூலத்துக்குப் பின்னும் நான் தண்டிக்கப்படுவதனுல் ஒரு வார்த்தைகூடக் கூற விரும்புகிறேன். நான் மிக மிகக் கொடிய வியாதி ஒன்றி னுல் துன்புற்றுக் கொண் டிருக்கிறேன். அது எனது

சரீரத்தில் பிராணாதாரங்களைத் தின்றுகொண்டிருக்கிறது. எனது ஸ்தூல சரீரம் உடைபட்டுக் கிடக்கிறது; எனது ஆரோக்யம் மிகவும் பலஹீனமாயிருக்கிறது. கடுங்காவல் தண்டனையின் கஷ்டங்களை நான் சகிக்க முடியுமென்று நினைக்கவில்லை. ஆனால், இதனால் நான் தயையை நாடு கிறேனென்று கருத வேண்டாம். தெரிவிப்பதற்காகவே நான் இதைக் கூறுகிறேன்.

(7) இந்த வாக்குமூலத்தைத் தமிழில் எழுதிக் கொடுக்காததைப்பற்றி எனது தமிழ் நாட்டினரில் சிலர் ஒரு வேளை என்னைக் கடிந்துகொள்வார்கள்; நான் தமிழ் நாடு முழுதும் அனேகமாக யாத்திரை செய்திருக்கிறேன்; எனது பிரசங்கங்களைக் கேட்கவும், என்னுடன் வாதிக்க வும் தங்கள் இஷ்டப்பிரகாரம் என்னை அறிந்துகொள்ளவும் எனது சகோதரர்களுக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்திருக் கின்றன. ஆகையால், அவர்களுக்கு எனது கொள்கை களும் நோக்கங்களும் தெரியும். இப்பொழுது தமிழ் பாஷை அறியாத எனது தேசத்து ஜனங்களும், பிறரும் எனது நிலமையையும் — கொள்கைகளையும் — கோட்பாடு களையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்பு கிறேன்.

(8) தண்டனை யடைவேனானால் இயேசுகிறிஸ்து குருசில் அடிக்கப்பட்டபொழுது, தேவலோகத்திலுள்ள பிதாவை நோக்கி பிரார்த்தித்ததுபோல, தாயே! அவர்களை மன்னிப்பாய்! ஏனெனில் தாங்கள் செய்வது இன்ன தென்று அவர்கள் தெரிந்துகொள்ளவில்லையென்று சர்வ சக்தியுள்ள மாதாவை நோக்கி பிரார்த்திப்பேன் அவ்வளவு தான்;

தீர்ப்புக் கூறப்பட்ட அன்றிரவே திருச்சி ஜயிலுக்கு மாற்றப்பட்டார். விசாரணையிலிருந்தபொழுதே

இவருக்குப் பேதியும் ஜுரமும் கண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். திருச்சி வந்ததும் வியாதி அதிகமாகி விட்டது. படுத்த படுக்கையாய்விட்டார். பிழைப்பதே அரிது என்று எல்லோரும் அபிப்பிராயப்பட்டனர். இனி மேல் ராஜீய விஷயங்களில் தலையிடுவதில்லை என்று ஒரு உறுதிமொழி எழுதிக்கொடுத்து விடுதலையை வேண்டினர். அரசாங்கத்தார் வெகுநாட்கள் வரையில் அந்த வேண்டு கோளைக் கவனிக்கவே யில்லை. பின்னர், சிறைச்சாலை வைத்திய அதிகாரி இவருடைய சரீர ஸ்திதி கவலைக் கிடமாகிவிட்டதனால் இவரை விடுதலை செய்யவேண்டும் என்று அரசாங்கத்தாரிடம் சிபார்சு செய்யவே, அவ்வாறே எவ்வித நிபந்தனையுமின்றி 1922-ஆு ஜனவரி மாதம் 12-உ யன்று விடுதலை செய்யப்பெற்று, சின்னுட்கள் சென்னையில் தாமதித்துவந்தார். சரீர ஸ்திதியை முன்னிட்டு சென்னை, ராயப்பேட்டை, பைகிராப்ட்ஸ் ரோட்டிலுள்ள ஸ்ரீமான் டாக்டர் வி. ஆர். சுந்தரம் அவர்களிடம் ஔஷதம் சாப்பிட்டுவந்தார். தேச சேவையும் பொது ஜன ஊழிய மும் இன்னும் இவருடைய மனத்திலே வேரூன்றிக் கிடந்தன. சீக்கிரத்தில் பெரு முயற்சி ஏதேனும் செய்வா ரென்று தோன்றிற்று. அவர் பூஜித்துவரும் பாரதமாதா வாம், மஹா சக்தி அவருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்து அவருக்குச் சாந்தியை அளிக்குமாறு அன்பர்கள் வேண்டிக்கொண்டிருந்தனர்.

இரண்டாம் முறை 108 ஜாமீன்

சிறிது நாட்கழித்து உடம்பு சௌக்கியமானதும் சில நண்பர்களுடன் 'ஹிந்துஸ்தான் பஞ்சாயத்து' என்று ஓர் சபை ஸ்தாபித்து, அதன் மூலம் ஆதிகாலத்தில் கிராமங் களில் நடைபெற்றுவந்த பாரமார்த்திக வாழ்க்கையைக் கொண்ட 'பஞ்சாயத்து ஆட்சி'யை உண்டுபண்ண முயற்சி செய்தார்; திட்டங்கள் வகுத்தார்; பிரசங்கங்கள்

புரிந்தார். பஞ்சாயத்தின் ஆதரவில் இரு சாராரும் சம்மதப்பட்ட சில வழக்குகள் விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன. நவராத்திரி சமயம் ஸ்ரீ பாரததேவிக்கு உற்சவம் நடத்தினர். இவர் செய்துவரும் பல வேலைகளைக் கண்டு இவர் பேரில் 1922-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் சென்னை சர்க்கார் 108 பிரிவின் கீழ் ஜாமீன் நடவடிக்கை எடுத்தனர். இராஜ தந்திரத்தில் கைதேர்ந்த இந்த சர்க்காருடன் தானும் தந்திரமாகவே எதிர்த்து வேலைசெய்ய வேண்டுமென்று எண்ணங்கொண்ட சிவம் இரு தடவைகளில் சிறைவாசம் அனுபவித்தது போதுமென்று நினைத்து ஜாமீன் கொடுத்தனர். 1923-ம் வருஷ ஆரம்பத்தில் தர்மபுரி, கோயம்புத்தூர், பாப்பாரப்பட்டி முதலான சில இடங்களில் அவ்வூர்வாசிகளின் வேண்டுகோட் கிணங்கி பல பிரசங்கங்கள் செய்யச் சென்றனர். இவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்ட—நீண்டநாள் சினேகிதரும் பாப்பாரப்பட்டி வாசியுமான ஸ்ரீ சின்னமுத்து முதலியார் சிவத்தைப் பாப்பாரப்பட்டியிலேயே இருக்கும்படிக்குக் கேட்டுக்கொண்டார் அவ்வூர் வாசிகளின் அபிப்பிராயத்திற் கிணங்க, அவர்களுடைய உதவியினாலும், முயற்சியினாலும் அவ்வூருக்குச் சமீபத்தில் ஓர் இடத்தில் ஸ்ரீ பாரததேவிக்கு ஓர் ஆலயமும் ஏற்படுத்துவதாக நிச்சயம் செய்துகொண்டு தனது வாசஸ்தலத்தை சென்னையிலிருந்து பாப்பாரப்பட்டிக்கு மாற்றிக்கொண்டார். அவ்வமயம் அன்னார் தாயார் காசியில் இவரது சகோதரர் வீட்டில் காலமான செய்தி கேட்டு, அன்னாரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்தனை செய்து ஏழைகளுக்கு அன்னமிட்டனர்.

ஸ்ரீ பாரதமாதா ஆலய நிர்மாணம்

பாப்பாரப்பட்டி வாசிகளின் உதவியினால் அவ்வூரிலிருந்து அரை மைல் தூரத்தில் ஏழு ஏக்ரா விஸ்தீரண

முள்ள ஓர் இடம் வாங்கப்பெற்று, அதற்கு "ஸ்ரீ பாரத புரம்" என்ற நாமமும் சூட்டப்பெற்றது. அதில் மேலக் கடைசியில், பாப்பாரப் பட்டியிலிருந்து மென்னுகரம் போகும் ரஸ்தாவுக்குச் சமீபத்தில், மேற்கே பார்த்து ஸ்ரீ பாரத தேவிக்கு ஒருகோயில் கட்டுவதென்று நிச்சயிக் கப்பெற்றது. அதற்கு 1923-ம் வருஷம் ஜூன் மாதத்தில் காங்கிரஸ்காரர்கள் சட்டசபைகளைக் கைப்பற்றி, முட்டுக் கட்டை போட்டு அந்நிய சர்க்காரை ஸ்தம்பிக்கச் செய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்டு, தமது கொள் கையை நிலைநாட்ட 'காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி' என்ற ஓர் ஸ்தாபனம் நிறுவி, நாடெங்கும் திக்விஜயம்செய்துவந்த நமது தலைவர் ஸ்ரீ தேசபந்து சித்தரஞ்சன தாஸரால் அஸ்தி வாரக்கல் நாட்டச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்து வரவேற்க வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் இரவு பகல் ஓயாமல் செய்தார். அவ்வமயம் தர்மபுரி தாலூகாவாசி களுக்கு ஏற்பட்ட உத்சாகத்திற்கு அளவேயில்லை. பாப்பா ரப்பட்டி கிராமம் முழுதும் அலங்காரங்கள் செய்யப் பட்டன. தேஸபந்துதாஸர் சேலத்திலிருந்து பெங்களூர் போகும் சமயம் ருதிரோத்காரி வருஷம் ஆனி மாதம் 8வ (22—6—23) பாப்பாரப்பட்டியில் மிகவும் சிறப்பாக வரவேற்கப்பெற்று யூனியன் பஞ்சாயத்தாரால் ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. பின்பு ஸ்ரீ பாரதபுரத்திற்கு ஸ்ரீ தாஸர் அழைத்துச் செல்லப் பட்டார். ஸ்ரீ பாரதாஸ்ரம வாசிகள் ஒரு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். அதன் பிறகு சிவம் வேண்டிக் கொள்ள ஸ்ரீ தாஸர் ஸ்ரீ பாரததேவியின் ஆலயத்திற்கு மிகுந்த பக்தி சிரத்தையுடன் அஸ்திவாரக் கல்லை நாட்டினர். அன்னர் ஒரு நிமிஷம் கைகூப்பி தியானத்தி லாழ்ந்து சிவத்திடம் அப்பெரு முயற்சிக்கு தன்னிடமிருந்த சிறிது பணத்தை நன்கொடையாகக் கொடுத்து தன்னலான

சகலவித உதவியும் செய்வதாக வாக்களித்தார். அங்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான கிராமவாசிகளுக்கு சில உபதேசங்கள் செய்தார். அன்று மாலை பாப்பாரப்பட்டியில் கூட்டப்பெற்ற மாபெரும் கூட்டத்தில் ஓர் பிரசங்கம் செய்துவிட்டு ஸ்ரீ தாஸர் பெங்களூர் சென்றுவிட்டார். சிவம் முயற்சியினால் ஏற்பட்ட தாஸர் வரவு கிராமவாசிகளுக்கு நூதன தேசியஉணர்ச்சியை உண்டு பண்ணியது. அதுமுதல் கோயிலைக் கட்டி முடிக்கவும், ஆஸ்ரமத்தை முன்னேற்றத்திற்குக்கொண்டுவரவுமான ஏற்பாடுகளை சிவா செய்துவந்தார்.

ஆஸ்ரமும், சமாஜமும்

1923-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் சேலத்தில் நடைபெற்ற 29-வது தமிழ் மாகாண மகாநாட்டிற்கு சிவம் சென்றிருந்தார். அங்கு மகாநாட்டில் ஸ்ரீ தாஸரின் கட்சிக்குச் சாதகமாகச் சிறிது நேரம் பேசும் சமயம் பிரதிநிதிகள் காட்டிய உத்ஸாகத்திற்கு அளவேயில்லை. அச்சமயம் தனது பாரதாஸ்ரமத்தைப் பின்பற்றி மதுரை தேசபக்தர் ஸ்ரீ ரா. ஸ்ரீநிவாஸவரதையங்காரைத் தலைமையாகக் கொண்டு மதுரை, திருச்சினாப்பள்ளி, கோயம்புத்தூர் சேலம் முதலான ஜில்லாக்களில் வேலைசெய்துவிட்டு மகாநாட்டுக்கு வந்திருந்த தேசபக்த சமாஜத்தாரை, சிவம் சந்தித்துப் பேசி சிறிதுகாலம் ஆஸ்ரமத்தில் தன்னுடன் வந்து தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு போகுமாறு சொன்னார். அதன்படியே சமாஜத்தாரும் பாப்பாரப்பட்டிக்கடுத்த ஸ்ரீ பாரதபுரம் சென்றார்கள். பாப்பாரப்பட்டியில் சமாஜத்தாருடைய வரவை முன்னிட்டு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது சிவம் அவ்வூர் வாசிகளுக்கும், தன்னுடனிருந்த வாலிபர்களுக்கும் நூதன உணர்ச்சி யுண்டாகுமாறு ஓர் பிரசங்கம் செய்தார். ஒரு வாரம் கழித்து தான் பார்த்து அனுப

வித்தும், அப் பாப்பாரப்பட்டியி லிருந்து 24 மைல் தூர முள்ளதுமான ஹொகயனகல் காவிரி யென்ற இடத்திற்கு தன்னுடனிருந்த வாலிபர்களைக் கூட்டிச் சென்றார். அப் பயங்கர வனத்தில் இரண்டு தினங்கள் தங்கி அங்கிருந்த மலைத் தொடர்புகளையும், ஆழ்ந்த பள்ளத்தாக்குகளையும், அழகிய குன்றுகளையும், பாழடைந்த கோயில்களையும், சப்தமிட்டு வரும் காவிரி நதியையும், அதன் அழகிய சிறு நீர்வீழ்ச்சிகளையும், அடர்ந்த காட்டையும் கொண்ட அம் முரட்டுக் காட்சியின் பெருமையைக் கண்டு களிக்கச் செய்தார். அவ்வமயம் அன்னாரின் நினைப்பு மிகவும் பெரிதாக யிருந்தது. அவர் அங்கு ஓர் பிர்மச்சர்ய ஆஸ்ரமம் ஸ்தாபித்து சிறுவர்களைப் பழக்க வேண்டுமென்றிருந்தார். இரண்டு நாட்கள் தங்கி வனபோஜனம் செய்து காட்சிகளைக் கண்டு அனுபவித்த பிற்பாடு எல்லோரையும் கூட்டிக்கொண்டு ஆஸ்ரமம் வந்து சேர்ந்தனர். இதற்கு முன் ஒரு தடவை சிவம் அங்கு சென்றிருந்தது குறிப்பிடத் தக்கது. தான் அனுபவித்ததை வாலிபர்களும் பார்த்து வீர உணர்ச்சிபெற்று வீர வாழ்வு வாழவேண்டுமென்பதே சிவத்தின் நோக்கம்.

நாடகம், நவராத்திரி உற்சவம்

ஆஸ்ரமத்தாரும், சமாஜத்தாரும் அடங்கிய ஓர் வாலிபக் கூட்டம் இருப்பதினால், சில தேசிய நாடகங்கள் நடத்தலாம் என்ற எண்ணங்கொண்டு, சிவம் தானே எழுதிய "சிவாஜி" நாடகத்தை வாலிபர்களுக்குப் பயிற்றுவித்தார். அக்டோபர் மாதத்தில் மிகவும் சிறப்பாக சிவாஜி நாடகம் தர்மபுரியில் நடத்தப் பெற்றது. அப்பொழுது சிவம் சமர்த்த இராமதாஸராக வேடம் பூண்டு சிவாஜி மஹாராஜாவுக்கு ராஜதர்மத்தை உபதேசம் செய்தது சாக்ஷாத் ராமதாஸரே வந்து உபதேசித்தது போலிருந்தது. பின்பு ஆஸ்ரமத்திற்கு வந்து நவராத்திரி பத்து தினங்களும் ஸ்ரீ பாரததேவிக்கு

உத்ஸவம் நடத்தப் பெற்றது. ஸ்ரீ தாஸர் அஸ்திவாரம் நாட்டிய இடத்தில் ஓர் கொட்டகை போடப்பெற்றது. ஸ்ரீ பாரததேவியின் படத்தையும் நமது தேசத்தையும் மதத்தையும் காக்க அவதரித்த பெரியோர்களின் படங்களையும் வைத்து தினந்தோறும் காலையும் மாலையும் பூஜையும், தேசிய பஜனையும் செய்யப் பெற்றது. கடைசி தினமாகிய விஜயதசமி யன்று ஸ்ரீ பாரததேவியை ஓர் சப்பரத்தில் அலங்காரம் செய்வித்து பாப்பாரப்பட்டி வீதிகளில் தேசிய பஜனையுடன் எழுந்தருளப்பண்ணி மறுபடியும் ஆஸ்ரமத்திற்குத் திரும்பிப் போய் கற்பூர ஆரத்தி எடுத்து வந்திருந்தோர்க்கு தேவியின் குங்குமம், சந்தனம், தாம்பூலம், பிரசாதம் முதலானது விநியோகிக்கப்பெற்றன. பாப்பாரப்பட்டி வாசிகள் தினப்படி மண்டபப்படியை ஒவ்வொருவராக எற்று சிறப்பாக நடத்தி வைத்தனர். இத் திருநாளுக்கு தர்மபுரி பாலக்கோடு, மாரண்டஹன்னி முதலிய ஊர்களிலிருந்து பலர் வந்திருந்தனர். இக் கொண்டாட்டம் அவ்வூர்ச் சிறுவர்களுக்கு ஓர் உணர்ச்சியை உண்டு பண்ணியது.

ரயிலேறக் கூடாது

நவம்பர் மாதத்தில் கோயில் ஆஸ்ரமம் நிமித்தமாக இரண்டொரு வாலிபர்களைக் கூட்டிக்கொண்டு சுவாமி சிவம் சேலம், திருச்சி, மன்னார்குடி, தஞ்சாவூர் முதலான ஊர்களில் சுற்றுப் பிரயாணம் செய்யப் புறப்பட்டனர். ஏனைய வாலிபர்களில் ஆஸ்ரமத்தி லிருந்த இரண்டு மூன்று பேர்களைத் தவிர மற்றோர் வடஆற்காடு, சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு முதலிய ஜில்லாக்களில் பிரசார வேலை செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றனர். சுவாமி சிவம் தஞ்சாவூர் வருவதற்குள் அன்னார் பேரிலிருந்த ஜாமீன் கெடுவுநாள் முடிந்துவிட்டதனாலே இராப்பகல் ஓயாமல்

பல வாலிபர்களுடன் தேச மகாஜனங்களுக்கு தேசிய உணர்ச்சியைப் பரப்பிவரும் சுவாமி சிவத்தை எப்படி யாவது மடக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்ட சென்னை சர்க்கார், அவர் வியாதியஸ்தராகையினாலே "ரயிலேறக் கூடாது" என்ற உத்தரவை அன்னார் தஞ்சா வூரிலிருந்து திருவாரூருக்கு ரயிலேறும் சமயம் சார்வு செய்தனர். ஒரு பக்கம் வியாதி, மற்றொரு பக்கம் வறுமை, இன்னொரு பக்கம் அரசாங்கத்தாரின் கண்காணிப்பு' பிறிதொரு பக்கம் அகம்பாவமும் மூட நம்பிக்கையும் கொண்ட ஜனங்களின் தூற்றல், பின்னொரு பக்கம் காங் கிரஸ்காரர் என்று சொல்லப்பட்ட சிலரின் அநாதரவு. இதற்கு மத்தியில் வாலிப உலகத்திற்கு வழிகாட்டப் பிறந் திருப்பவரும், 'வடகோடி உயர்ந்தென்ன தென்கோடி சாய்ந்தென்ன வான்பிறைக்கே என்ற கோஷத்தை அடிக்கடி சொல்லி ஊக்கத்தைக் கொடுப்பவரும், தன்னைப் பின்பற்ற ஒருவரும் இல்லாமல் ஏகாங்கியாக தான் ஒரு வரே இருந்தாலும், ஹிம்சையோ அஹிம்சையோ எந்த விதத்திலும் 'பரிபூர்ண சுயராஜ்யம்' அடைவதே தன் லட்சியம் என்று கோஷித்து அதற்காக தன் வாழ்நாளை அற்பணம் செய்யத் தயாரா யிருப்பவருமாகிய சுவாமி சிவம் உத்தரவைப் பார்த்துச் சிறிது ஆச்சர்யம் அடைந்த போதிலும் "சரி இதுவும் பாரதசக்தியின் விளையாட்டே" என்று வாங்கிக்கொண்டு, உடனே ஓர் குதிரை வண்டி அமர்த்தி திருவாரூர் வந்து சேர்ந்தனர். அங்கு இரண்டு மூன்று நாட்கள் தங்கி சில பிரசங்கங்கள் செய்தார். உடம்பில் ஏற்பட்ட ஆயாசத்தினால் நோய்வாய்ப்பட்டார். "செத்துப் பிழைத்தார்" என்றே சொல்லலாம். அன்னார் அவ்வமயம் ஓர் ஆஸ்ரமவாசிக்கு எழுதிய கடிதத்தில் "எவ்வளவு கஷ்டம் வந்தாலும் மனம் கலங்கக்கூடாது. யான் இம்முறை யமனுடன் மூன்றும்முறை போராடி

ஜயித்துவிட்டேன். அரசாங்கத்தார் என்னை எவ்வளவு கட்டுப்படுத்தினாலும் என் மனத்துள் மூண்டு பிடித்து எறிந்து கொண்டிருக்கும் நெருப்பை அணைக்க முடியாது. அத்தீயை உங்களிடத்தும் பற்றச் செய்கின்றேன். உங்கள் மூலம் தமிழ்நாடு முழுதும் பற்றிவிடும். அப்பொழுது இவ்வரசாங்கம் அடியோடு முடிசாய்ந்து விழுந்துவிடும்'' என்ற வீர வாக்கியங்களை எழுதி யிருந்தார்.

பின் உடம்பு சிறிது சௌக்கியமானதும் கட்டை வண்டி மார்க்கமாக கும்பகோணம், மாயவரம் தங்கி சீர்காழி போய்ச் சேர்ந்தனர். அங்கு சில நாட்கள் தங்கி பிரசங்கங்கள் செய்துவிட்டு ஆருத்திரா தரிசன சமயம் சிதம்பரம் அடைந்தனர். அவ்வமயம் தென்னாற்காடு ஜில்லாவில் வேலைசெய்து கொண்டிருந்த வாலிபர்களும் வந்து கூடிக்கொண்டனர். ஆஸ்ரமத்தில் இருந்த வாலிபர்களும் வந்து சேர்ந்து கொண்டனர். அவ்வமயம் சுவாமி சிவம் தலைமையின்கீழ் தமிழ் நாட்டில் உள்ள பல ஜில்லாக்களைச் சேர்ந்த முப்பது வாலிபர்கள் பயிற்சி பெற்றனர். அங்கு ஒரு மாதம் தங்கி பல பிரசங்கங்கள் செய்தும், தினந்தோறும் வீதிகளில் தேசீய பஜனை செய்தும் ஜனங்களுக்கு ஊக்கத்தை உண்டுபண்ணினர். மகாத்மா காந்தி குடல் நோய் சிகிச்சை சமயம் திடீரென்று ஓர் உணர்ச்சி தோன்றி சுவாமி சிவம் 'திலகர் காந்தி தரிசனம்' என்ற சிறு நாடகத்தை எழுதினர். அந்நூல் தத்ரூபமாக நடப்பது போல் தோன்றும். அவ்வூரில் சுவாமி சிவம் 'சிவாஜி' நாடகம் நடத்த ஏற்பாடு செய்தார். ஆட்ட தினத்தன்று அவ்வூரிலுள் சர்க்கார் உத்தியோகஸ்தர் 144-வது சட்டப்படி தடுத்துவிட்டனர். மிகவும் நஷ்டத்துடன் வாலிபர்களோடு சிவம் கடலூர் சென்றனர். அங்கு நாடக விஷயமாய் ஜில்லா அதிகாரியைப் போய்ப் பார்த்தார். அன்னர் உத்தரவை மாற்ற முடியாதென்று

சொல்லிவிட்டார். அங்கு சில நாள் தங்கினர். மத விஷயமாகவும், தேசீய விஷயமாகவும் பல பிரசங்கங்கள் நடைபெற்றன. தினந்தோறும் வீதிகளில் பஜனையும் நடைபெற்றது. இங்கு சுவாமி சிவம் அவர்களுடன் கூட வேலை செய்த சமாஜத்தாரில் சிலர் அன்னருடன் தங்கினர், ஏனையோர் மதுரையை நோக்கிப் புறப்பட்டனர்.

மூன்றும் முறை 124-ஏ.

சுவாமி சிவம் ஆஸ்ரமத்தாருடன் அங்கிருந்து பண்ருட்டி, திண்டிவனம், திருக்கோயிலூர் மார்க்கம் திருவண்ணுமலை போய்ச் சேர்ந்தனர். அங்கு ஸ்ரீ ரமண மஹரிஷியைத் தரிசனம் செய்துவிட்டு ஆரணி, வேலூர், குடியாத்தம் மார்க்கமாக சென்னை போய்ச் சேர்ந்தனர். ஆறு மாதகாலம் அங்கு வீதிதோறும் பஜனையும், பிரசங்கங்களும் நடைபெற்றன. ஆஸ்ரமத்தார் தினந்தோறும் மூர் மார்க்கட்டில் பிரசங்கங்கள் செய்ய, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தடுக்கவே, மீறிப் பேச இரண்டொருவர் தண்டிக்கப்பட்டு சிறை சென்றனர். அவ்வமயம் சுவாமி சிவம் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கோயில், ஆஸ்ரமம் விஷயமாக உக்ரகமான இரண்டு பிரசங்கங்கள் செய்தனர். அது சம்பந்தமாக அவர் பேரில் அரசாங்கத்தார் 124-ஏ. பிரிவுப்படி வழக்குத் தொடர்ந்தனர். அன்னர் அவ்வழக்கில் நேரில் தானுகவே வழக்காட 1924-ஹு அக்டோபர் மாதம் அவ் வழக்கு சர்க்காரால் தள்ளுபடி செய்யப்பட்டது. அன்னர், நியாய ஸ்தலத்தில் செய்த வாதம் மிகவும் போற்றற்குரியது. தான் புறப்படு முன்பே நவராத்திரி சமயம் நடைபெறும் ஸ்ரீ பாரதேவி உத்ஸவத்தின் நிமித்தம் ஆஸ்ரமத்தாரை பாப்பாரப்பட்டிக்கு அனுப்பிவிட்டனர். பாப்பாரப்பட்டி வாசிகளின் உதவியால் ஆஸ்மரத்தில் சுவாமி சிவம் இல்லாதிருந்தும்

திருநாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. வழக்கின் சமயம் சிவம் ஓர் நண்பருக்கு எழுதிய கடிதத்தில் 'திரிசூலம் தாங்கவேண்டிய சிவம் இதுவரை பேனா முனையினாலும், நா முனையினாலும் தாக்கிவருகிறது. திரிசூலம் தாங்கவேண்டிய காலம் வரும்'' என்று கண்டிருந்தது. வழக்கு முடிந்ததும் சிவம் அரக்கோணம், ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் மார்க்கம் ஆஸ்ரமம் போய்ச் சேர்ந்தனர். சிவம் ரயிலேறக் கூடாதென்ற அரசாங்கத்தின் அசட்டுத்தனமான உத்தரவினால், போகும் வழியிலுள்ள கிராமங்களிலெல்லாம் தேசீய உணர்ச்சிக்கு எல்லையே யில்லை.

நோயுடன் பிரயாணம்

சுவாமி சிவம் ஆஸ்ரமம் வந்ததும், மற்றொரு முறை ஹொகயனகல் காவிரி சென்றார். திரும்பி வந்ததும் சிறிது நாள் மலேரியா ஜ்வரத்தினால் கஷ்டப்பட்டார். கொஞ்சம் சௌக்கியமானதும் தர்மபுரி, ஈரோடு மார்க்கம் ஆஸ்ரமத்தாருடன் பவானி வந்து சேர்ந்தார். பவானியில் ஒரு மாதம்போல் சுவாமி சிவமும், ஆஸ்ரமத்தாரில் இரண்டொருவரும் படுத்த படுக்கையில் மிகவும் கஷ்டப்பட்டார்கள். எல்லோரும் சிறிது சௌக்யமடைந்ததும் உடுமலைப் பேட்டை, தாராபுரம், பழனி, திண்டுக்கல் சோழவந்தான் மார்க்கம் 1925-ளு ஏப்ரல் மாதம் 9-உ மதுரை சேர்ந்தனர். இந்தத் தடவை சுவாமி சிவம் உடம்பு சௌக்கியம் அடையவே யில்லை. அப்படியிருந்தும் தளரா ஊக்கம் கொண்ட சிவம் வழி நெடுக ஒவ்வொரு இடத்திலும் பல பிரசங்கங்கள் செய்துகொண்டே வந்து சேர்ந்தார். உடம்பு அசௌக்கியமாயிருந்தும் மதுரையிலும் மூன்று பிரசங்கங்கள் செய்தனர். மே மாதம் 10-உ இந்தியாவின் சுதந்திர யுத்த தினம் கொண்டாடப்பெற்றது. ஆஸ்ரம

வாலிபர்களைக்கொண்டு மதுரையில் 'ஸ்ரீ பாரத விலாஸ சபை' ஆதரவில் 'சிவாஜி', 'தேசிங்' முதலான நாடகங்களை நடத்திக் காண்பித்தார். சிரமமிருந்தும் அன்னார் 'சிவாஜி' நாடகத்தில் 'சமர்த்த ராமதாஸராக' வேடம் பூண்டு சிறப்புடன் நடித்தார். உடம்பு சிறிது சௌக்கியமானதும் திருநெல்வேலி ஜில்லா மார்க்கமாக மேற்குக் கடற்கரை யோரமாய் பம்பாய் சென்று, கான்பூரில் நடைபெறும் பொதுவுடமைக் கட்சி மகாநாட்டிற்குச் சென்றுவிட்டு, கல்கத்தா சென்று ஸ்ரீ தேசபந்து தாஸரைப் பார்க்கவேண்டு மென்று எண்ணிக்கொண்டிருந்தார். ஆனல், பராசக்தி சுவாமி சிவத்திற்கு "நீ இந்த உடலுடன் இவ்வளவு பாடுபட்டது போதும், என்னிடம் வந்துவிடு" என்று ஆக்ஞையிட்டுவிட்டான் போற் றேன்றுகிறது. சிவம் மதுரை மாநகரில் மூன்று மாதத்திற்கு மேலாகவே தங்கினர். நாளுக்குநாள் தேக பலம் குன்றிக்கொண்டேவந்தது. வியாதி அதிகமாய் விட்டது.

நீங்கா துக்கம்

அன்னர் தன் ஆத்ம நண்பரும், 'தமிழ்நாட்டு குருகுல வித்யாலய' ஸ்தாபகருமான மஹரிஷி வ. வே. சு. ஐயர் தமது அருமைப் புதல்வி சுபத்ரையுடன் கல்யாண அருவியில் உயிர் நீத்தார் என்ற செய்தியைக் கேட்டார். அப்பொழுதே சுவாமி சிவத்துக்குப் பாதிப் பிராணன் போய்விட்டது. சிறிது நாளைக்குள் சுமார் 20 வருடங்கட்கு முன், தன்னுடன் இளம் பிராயத்தில் தேச சேவையில் ஈடுபட்டு சிறை சென்று—திரும்பிவந்து முன்னணியில் நின்றுகொண்டே தேசத் தொண்டாற்றி வந்த காஞ்சீபுரம் ஸ்ரீ கிருஷ்ணசாமி சர்மா விண்ணுலகெய்திய சமாசாரம் எட்டி, ஆராத் துயரத்தி லாழ்ந்தார். எதிர்

பாராத துக்கத்தில் மூழ்கியிருந்த சமயத்தில் தனது முயற்சிக்கு எவ்வளவோ உதவி செய்வதாகச் சொல்லி வங்காளத்திற்கு அழைத்த மாபெருந் தலைவரும், ஸ்ரீ பாரத தேவியின் ஆலயத்திற்கு அஸ்திவாரம் நாட்டினவருமான ஸ்ரீ தேசபந்து தாஸர் பூதவுடம்பை நீத்து புகழுடம்பெய்திய செய்தியைக் கேள்வியுற்று, மனமுடைந்து இனி நாமும் நீண்டகாலம் இருக்கமாட்டோம் என்று எண்ணி உடனே ஸ்ரீ பாரதாஸ்ரமம் புறப்படவேண்டும், அங்கே ஸ்ரீ பாரத மாதாவின் ஸந்நிதானத்தில்தான் மகாசமாதியடைய வேண்டுமென்று நிச்சயித்து ஆஸ்ரமவாசிகளிடம் தனது தீர்மானத்தை சொன்னார். அப்பொழுது எழுந்திருக்க முடியாது.

தன்னம்பிக்கையே உருவம்

சுவாமி சிவம் இருக்கும் நிலையில் எப்படி 300 மைல்களுக்கு அப்பாலுள்ள பாப்பாரப்பட்டிக்கு அன்னாரை அனுப்பிவைப்பது? என்று யோசித்து ஆஸ்ரம வாசிகள் சிறிது தயங்க, எழுந்திருக்கமாட்டாமல் படுத்த படுக்கையிலிருந்த சிவம், முழு சக்தியுடன் ஆவேசம் கொண்டவர் போல் எழுந்து நின்று தடியை ஊன்றி 'நீங்கள் எனனைக் கூட்டிப் போகின்றீர்களா? அல்லது நடந்து போகட்டுமா? என்று கம்பீரத்துடன் கேட்டார். இவர் சுபாவத்தை நன்குயறிந்த ஆஸ்ரமத்தார் சரியென்று ஒப்புக்கொண்டனர். சிவம் ரயிலேறக் கூடாது, இருந்தும் எப்படியும் அனுப்பிவைக்கலாம் என்று நிச்சயித்து, சிறிது தொகை வசூலித்து, மகாசக்தியின் பேரில் பாரத்தைப் போட்டு மறுநாள் காலை ஒரு ஒற்றை மாட்டு வண்டியில் அவரைத் தூக்கி உட்கார வைத்து மதுரைப் பாலம் போய்ச் சேர்ந்தனர்; ரயில் வந்தது; அன்னாரால் ஏற முடியவில்லை; மற்றவர் சகாயத்தையும் விரும்பவில்லை. நின்றுகொண்

டிருக்கிறார்; வண்டி புறப்படும் சமயம், பக்கத்திலிருந்த ஸ்ரீ தியாகராஜ சிவம்—சிவத்தை நேரே குண்டுக் கட்டாகக் கட்டி அப்படியே வண்டிக்குள் போட்டுவிட்டார். 'நமக்கும் இப்படி ஒரு காலம் வந்ததே' என்று சிவத்திற்கு ஓரளவு வருத்தந்தான். ஒருநாள் திருவானைக்காவலில் தங்கி தர்மபுரி மார்க்கமாக, 1925-ஞ ஜுலை மாதம் 22-உ சுவாமி சிவம் கூடியவரையில் சௌகரியமாக பாப்பாரப் பட்டிக் கடுத்த பாரதபுரம் ஸ்ரீ சுந்தர பாரதி என்ற உத்தம சிஷ்யருடன் போய்ச் சேர்ந்தனர்.

சிவம் சிவமானார்

குரோதன-ஞ ஆடி மாதம் 8-உ (23–7–45) வியாழக் கிழமை காலை 5 மணிக்கு இப் பெரியார் தனது 41-வது வயதில் மகா சமாதியடைந்தார். அன்று மாலை பாப்பாரப் பட்டி வாசியும், ஆஸ்ரமத்தின் முன்னேற்றத்தைக் கருது பவருமான ஸ்ரீமான் சின்னமுத்து முதலியார் அனைவருக்கும் சொல்லியனுப்பி, எல்லோரும் வந்துசேர்ந்ததும், ஆஸ்ரமத்தில் இருந்து சுவாமி சிவத்தை தேசிய பஜனையுடன் எழுந்தருளப் பண்ணி, ஆஸ்ரம நந்தவனத்தின் நடுவில் அடக்கம் செய்தனர். ஸ்ரீ சின்னமுத்து முதலியாரின் முயற்சியால் சமாதியும் கட்டப்பெற்றது. லிங்கம் பிரதிஷ்டையும் செய்யப்பட்டது. அன்னாருக்குப் பிறகு ஆஸ்ரம சொத்துக்களை ஸ்ரீ சின்னமுத்து முதலியாரே மேல்ப்பார்த்துவருகின்றார். மஹா சமாதியடைந்த தினம் ஏழைகளுக்கு வருடந்தோறும் அன்ன மளிக்கப்படுகிறது. தற்சமயம் பாப்பாரப்பட்டி கிராமம்—மதம், அரசியல், சமூகக் கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டு வேலைசெய்து வருகின்றது.

அன்னாரின் அருங் குணங்கள்

சுவாமி சிவம் எளிய வாழ்க்கையுள்ளவர்; நுட்பமான அறிவுள்ளவர்; வியாதியிலும் திட சரீரமுள்ளவர்; அஞ்சா

நெஞ்சம் படைத்தவர். சிம்ஹத்தைப் போன்ற தொனி யுள்ளவர்; விசால புத்தியுள்ளவர்; கூரிய பார்வை யுள்ளவர்; பாம்பைப் போன்ற செவி படைத்தவர்; யுக்தி வாதத்தில் நிகரில்லாதவர் ; பணக் கவலை யற்றவர்; தளரா ஊக்கமுள்ளவர்; பெருந்தன்மையுள்ளவர் ; மனோ, வாக்கு, காயம் மூன்றையும் எப்பொழுதும் ஸ்ரீ பாரததேவியின் வழிபாட்டிலேயே ஈடுபடுத்தியவர். வாலிபர் மூலம் தான் நமது நாடு முன்னேற்ற மடையும் என்ற நிச்சய புத்தி யுள்ளவர். கறுப்பு, வெள்ளை என்ற இரு ஜாதியே நமது தேசத்திலுள்ளது என்ற நோக்க முடையவர். பரிபூர்ண சுதந்திரம், சாம, பேத, தான தண்டம் ஆகிய சதுர்வித உபாயத்தினாலும் அடையலாம் என்ற கொள்கை யுடையவர். பாரத தேசம் பாரத மக்களின் நன்மைக்காக பாரத புத்திரர்களாலேயே ஆளப்பட வேண்டுமென்ற சித்தாந்த முள்ளவர். நமது தேசம் இராம ராஜ்யம், தர்ம ராஜ்யம்போல் ஆக வேண்டும் என்ற சிந்தனையுள்ளவர். தேசியத்தை மதமாக்கி மக்களுக்குள் பரப்ப வேண்டு மென்று எண்ணி பாரதியமதம், பாரத ஜாதி, பாரதமாதா கோயில் ஏற்படுத்த முயன்றவர். ஆணித்தரமான எழுத் தாளர். ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான பேர்களை தனது பிரசங்கத்தினால் திருப்பக்கூடிய வாக்குவன்மை படைத்தவர்.

சிவத்தின் சீடர்களில் சிலர்

இப்பெரியாரைப் பின்பற்றின ஸ்ரீமான்கள் சிவகிரி சங்கரன், எதிர்க்கோட்டை ரெங்கநாதையங்கார், மதுரை சுந்தர பாரதி, திருக்கோயிலூர் குமாரசாமி ஆகியோர் ஞான மார்க்கத்தி லீடுபட்டு, சாதுக்களை யடைந்து, நல்லுப தேசம் பெற்று, சந்யாஸ வாழ்க்கையைக் கைக்கொண்டுள் ளார்கள்.

கல்கி சதாசிவம், ஹோட்டல் எவரஸ்டு ஸ்ரீ சுந்தரம் இருவரும் வாழ்க்கையில் உன்னத பதவி யடைந்து தன்னாலான உதவியைத் தேசத்திற்காகச் செய்து வருகின்றனர்.

ஸ்ரீமான்கள் மதுரை தியாகராஜ சிவம், கிருஷ்ணகுந்து, கே. ஆர். ஸ்ரீநிவாசையங்கார், பாளையங்கோட்டை ஸ்ரீநிவாஸ ஆழ்வார், மதுரை ஸ்ரீமதி பத்மாயனி அம்மாள் ஆகியோர் தங்கள் சலியா உழைப்பினால் அகால மரண மடைந்தனர்.

ஸ்ரீமான்கள் மதுரை ரெ. சிதம்பர பாரதி, சங்கரன் கோயில் ந. சோமயாஜுலு இருவரும் அவரவர் கொள்கைப் படி தேசத் தொண்டாற்றி வருகின்றனர்.

மதுரை ஸ்ரீ ரா. ஸ்ரீநிவாஸவரதையங்கார் சுவாமி சிவம் கொள்கையை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளைச் செய்து வருகின்றனர். சிவாவைத் தெரிந்துகொண்ட மற்றும் பலரும், சிவாவுடன் பழகிய இன்னும் சிலரும் தற்சமயம் அவர்களா லியன்றவரை தேசப்பணி யாற்றி வருகின்றனர். அக்காலம் சிவாவின் கூட்டத்தார் பாரதி யார் பாட்டைப்பாடி நாடெங்கும் செய்த வேலையே தற்காலம் தமிழ்நாட்டின் எழுச்சிக்குக் காரணம்.

முடிவுரை

இப்படிப்பட்ட பெரியாரின் பூதவுடல் நம்மை விட்டுப் பிரிந்து போயினும், அன்னார் புகழுடம்பு இப்பரத கண்டத்தில் வியாபித்திருக்கிறது. அன்னாரின் ஆத்ம சக்தி நம் தமிழருக்குள் பரவி யிருக்கிறது. சுவாமி சிவத்துடன் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஜில்லாவையும் சேர்ந்த பல இளந் தமிழர்கள் பழகி வந்துள்ளார்கள். எல்லாம் வல்ல

பராசக்தியாகிய ஸ்ரீ பாரத தேவியின் அனுக்கிரஹத்தால் சுவாமி சிவம் கொள்கையைப் பின்பற்றும் பல வாலிபர்களும் ஒன்று சேர்ந்து நாட்டின் விடுதலைக்கு வழிகாட்டியாய் இருப்பார்களாக.

ரிப்பன் பிரசுர வெளியீடு

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றியவை

கலைக்கோயில் (நாவல்)

தமிழர் ஆவலாக எதிர்பார்த்த அற்புதமான நாவல். இக் கதைத் தலைவனை தமிழ் மணி உலக மெங்கும் தமிழ்க் கலையைப் பரப்பி இசை பெற்று வருகின்றான். சீடர்களுடன் போராடி வெல்கிறான். கலைக்கோயில் எழுப்பி தமிழருக்கு நிலையான புகழ் தருகிறான்.

ஸர் R. K. ஷண்முகம் செட்டியார் அவர்கள் முன்னுரையுடன் கூடியது.

ரிப்பன் பிரசுரம்
ராமச்சந்திரபுரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்